விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (12.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 83

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வடபகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கடற்படையினருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

வடபகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் தளர்த்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கடற்படையினரின் படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பின்னர் மீன்பிடி எல்லைக் கட்டுப்பாட்டை கடுமையாக்குவதற்கு அரசாங்கப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் இது தொடர்பாக ஜனாபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முன் வைக்கப்பட்ட யோசனைகளை கருத்திற் கொண்டு அக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி வல்வெட்டித்துறை வரை விதிக்கப்பட்டிருந்த எல்லைக் கட்டுப்பாடு தொண்டமானாறு கிழக்குப் பிரதேசம் வரை தளர்த்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் 5 கடல் மைல்கள் வரையான கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப்பதில் உள்ள தடைகளின் தளர்வு என்பது கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் எவ்வாறு இருந்ததோ அதே போன்று மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு முடிவு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று பவ்ரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்கில் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. வடக்குக் கிழக்கில் 53 இடங்களில் தேர்தல் இடைநிறுத்தம் அல்லது ரத்துச் செய்யப்படும் நிலையுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை ஏற்கனவே 13 இடங்களில் நடத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது. வாக்காளர் அட்டவணை தொடர்பிலும் முரண்பாடுகள் உள்ளன. ஆகையால் மார்ச் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை ஒத்திப் போடுவதுதான் சரியானதாகவிருக்கும் என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொற்றிக்கோ தெரிவித்தார்.

இதனிடையே 19 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்து விட்டதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவது குறித்து அரசு ஆராய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்ற அரசாங்கம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்க முடியாது என அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பாக முக்கியமாக கவனம் செலுத்தப் போவதாக விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டால் பலாலி விமான நிலையத்திற்கும் காரைநகர் கடற்படை முகாமிற்கும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் அச்சுறுத்தல் இருக்குமென அரசாங்கத்தின் விநியோக மார்க்கத்திற்கு தடை ஏற்படுத்துவதற்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை வழக்கு சந்தேக நபர் விடுதலை

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலை வழக்கிலிருந்து சந்தேக நபரான சிவராமன் சிவரஞ்சன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவரை 5 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சறோஜினி குசலா வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

பிணையில் விடுதலையாகும் சிவராமன் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் புலிகள் மீதான தாக்குதல் முறியடிப்பு

மட்டக்களப்பு வாகரைகட்டு முறிப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது இராணுவத்தினாலும் துணை ஆயுதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30மணியளவில் 30 பேர் அடங்கிய குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாயுதக் குழு மீது விடுதலை புலிகள் நடாத்திய பதில் தாக்குதலில் அவர்கள் ஆயுதங்களைப் போட்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

தாக்குதல் முறியடிப்புச் சம்பவத்தின் போது ஆயுதக் குழுவினரின் பெருமளவான ஆயுதங்களை தாம் மீட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-4)

## யாழ்.போக்குவரத்துப் பொலிஸாரின் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகள் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸாரின் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளன.

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங் களில் குடாநாட்டில் ஏற்பட்ட அசா தாரண சூழ்நிலைகளையடுத்து நிறுத்தப்பட்ட தமது கண்காணிப்புப் பணியை மீண்டும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸ் பொறுப் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சை விளக்குவதற்கு அமைச்சர் நிமால் இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜெனீவாவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் குறித்து விளக்குமாறு இந்தியா இலங்கை அரசிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து விளக்கமளிப்பதற்காக அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். ஜெனீவாவில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களில் இடம்பெற்ற விடயங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுக்களில் மேற்கொள்ளப்படவுள்ள விடயங்கள் என்பன குறித்து இந்தியாவிற்கு நிமால் சிறி பால டி சில்வா தெரிவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## அமெரிக்கக் குழு யாழ்.வருகை

யாழ்.குடாநாட்டில் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் பின்னரான நிலை தொடர்பாக ஆராய்வதற்கென அமெரிக்கத் தூதுவராலய உயர்மட்டக் குழு எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயத்தின் முதன்மைச் செயலர் தலைமையில் வருகைதரும் இக்குழு பலதரப்பட்ட பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ்.அரச அதிபர் ஆகியோரை இக் குழுச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. (ச-4)

## அரசாங்கத்துடன் இணைவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்து இது தொடர்பில் அறிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அலரி மாளிகையில் இருவருக்குமிடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது. மகிந்தவுக்கும் ரவூப் ஹக்கீமுக்குமிடையிலான சந்திப்பினையடுத்து தமது கட்சியின் ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்குவதாகக் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (ச-4)




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனதை மாற்றும் சக்தி அன்புக்கு மட்டும்தான் உண்டு

நாம் பெற்றுக் கொள்ளும் அறிவானது எமக்குச் சொந்தமானது அல்ல. தனித்து நம்மிலே ஆனதுமல்ல. பலரின் கொடுமதியால் எம்மிடம் செல்மதியானது .எனவே அதனைப்பெற்றது போல் கொடுப்பது தான் எம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே



இறைவன் ஆபிரகாமுக்கு முதிர்ந்த வயதிலே ஒரு மகனைக் கொடுத்தார். அந்த மகனையே தனக்கு தகனப் பலியாக்கும்படி கேட்கின்றார். ஆபிரகாம் இறைவனிடமிருந்து பெற்ற மகனையே மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் பலியிடக் கொண்டு சென்று பலியிட ஆயத்தமானபோது தடுத்து நிறுத்தப்பட்டார். இறைவன் ஆபிரகாமின் உறுதிப்பாட்டையும் விசுவாசத்தையும்கண்டு ஆபிரகாமுக்கு இன்னும் அதிகமாக அருள் வரங்களைப் பொழிந்தார்.

## இறைவனை நோக்கி நடக்க

நாம் ஒவ்வொருவரும் வெறுமனே இவ்வுலகிற்கு வந்தவர்கள். இங்குதான் அறிவு, ஆற்றல், திறமைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் .நாம்பெற்றுக் கொண்டவைகளை பொது நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். மாறாக சுய நலத்திற்காகவோ, சுய இலாபத்திற்காகவோபயன்படுத்தும்போது அது அழிவின் பாதையிலே போய்முடியும். 'நாம்கொடுப்பதை நிறுத்தும் வரை இறைவனும் தருவதை நிறுத்துவதில்லை'

## பரமபிதா காட்டிய பாதை

நாம் இறைவனை நோக்கி அடியெடுத்து வைக்காதவரை இறைவனும் நம்மைநோக்கி அடியெடுத்து வைப்பதில்லை. யோவானும், பேதுரும், யாக்கோவும் மலைக்கு இயேசுவோடுசென்றார்கள். அங்கே இயேசு தோற்றம் மாறியதையும் மோசேயும், எலியாவும் அவர்கள் முன் தோன்றியதையும் காணும் பேறுபெற்றார்கள்.

## மாற்றங்களுக்கு உட்படுவோம்

'நல்ல மாற்றங்கள் நல்ல மனதின் முயற்சியில் விளைவும் கனிகளே' என்று மாராஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இயேசுவின் தோற்ற மாற்றம் சீடர்களுக்கு அவர் மேல் உள்ள நம்பிக்கையை வலுவாக்கியது.

மனமாற்ற காலமாகிய தவக் காலத்திலே கடின மனங்களை மாற்றிக் கொள்வோம், கடும் போக்குகளைத் தளர்த்திக் கொள் வோம். இறைவனுக்கு விருப்பமில்லாத காரியங்களை ஒதுக்கிவிடுவோம். மாற்றத்துக்கு உட்பட எம்மை விட்டுக் கொடுப்போம்.

மாற்றமின்றி முன்னேற்றம் இல்லை என்பார்கள். நேர்மையாகச்சேர்த்து நியாயமான வழிகளில் செலவு செய்வோம். அடுத்தவர்களுக்குத் துன்பம் விளைவிப்பதை அடியோடு மறந்து விடுவோம். அன்புக்காக ஏங்கும் உள்ளங்களுக்கு ஆறுதலாக இருப்போம். பண்போடும், பாசத்தோடும் பழகிக் கொள்வோம். பரமனின் பாடுகளைத் தியானித்து நெஞ்சின் வடுக்களையும் எமக்கு ஏற்பட்ட காயங்களையும் ஆற்றிக் கொள்வோம். அடுத்தவர் பிழைசெய்கின்றார் என்று கூறிக்கொண்டு இருப்பதிலும்பார்க்க நாம் முன் மாதிரியாக நடந்து காட்டுவோம். இறையருளின் துணையை எந்நேரமும் மறக்காமல் வேண்டி நிற்போம். புதிய மாற்றங்கள் எம்மிடையேயும் உருவாகும்.

## தாராள உள்ளம் வேண்டும்

'தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதனை இழந்துவிடுவார். என் பொருட்டுத் தன் உயிரை இழக்கும எவரும் அதனைக் காத்துக் கொள்வார்'. (லூக் 9:24) கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்று புனித அசிசியார் கூறியதும் இதனாலன்றோ? அன்பைத் தவிர மனதை மாற்றும் சக்தி வேறு எதற்கும் இல்லை. அப்படி நடந்தாலும் அது தற்காலிகமானதே.

'நாம் நல்லவர்கள் என்பதால் கடவுள் நம்மை அன்பு செய்வதில்லை. கடவுள் நம்மை அன்பு செய்வதாலே நாம் நல்லவர்களாக இருக்கின்றோம்' என்று லூயிஸ் என்ற இறையியல் அறிஞர் கூறுகின்றார்.

எனவே நாம் சூரியன்கள் அல்ல. ஒளியைப் பெற்று ஒளி பரப்ப வேண்டிய சந்திரன்கள். எனவே எம்மிடம் மமதை இருக்கக் கூடாது. மன்னிக்கும் மனப்பாங்கு இருக்க வேண்டும்.

**யாழ்.ஜெயம்தாசன்**

இறைவனின் கரத்தில் இருக்கின்றோம் என்ற உணர்வு வேண்டும். தவறி விழுந்து விடக்கூடாது. தாரகை நடுவே தண்மதியாகவும், அநீதி நடுவே உண்மையாகவும், குழப்பங்கள் நடுவே அமைதியாளராகவும் செயற்பட இறைவரம் வேண்டுவோம். □

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும், தயா அச்சக உரிமையாளருமான திருமதி வி. தயா பரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-9)

## புதிய பஸ் தரிப்பிடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை துறைமுக வீதியில் தனியார் பேருந்து சங்கத்தால் நடாத்தப்படும் மினிபஸ் சேவைக்கும் வடபிராந்திய பஸ் சேவைக்கும் தனியான பஸ் தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தைக்கு முன்பாக பஸ்கள் தரிப்பதற்கும் தடைசெய்யப்பட்டுள்ளது. (க-72)

## இராசி பலன்

**12.03.2006**
**(மாசி 28, ஞாயிற்றுக்கிழமை)**
**திரோயதசி பின்னிரவு 1.34 மணிவரை**
**ஆயிலியம் பிற்பகல் 5.14 மணிவரை**
**இராகுகாலம் 4.52-6.22மணிவரை**
**சுபநேரம் 9.22-10.52 மணிவரை**
**பிரதோச விரதம்**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், தனவிரயம், நல்லமுயற்சி, தாய்வழி உறவு. |
| இடபம் | மனோ தைரியம், நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, தேகநலன். |
| மிதுனம் | போசனசுகக் குறைவு, காரிய இடையூறு, மரியாதைக்குறைவு, பொருள் விரயம். |
| கடகம் | வெகுமானம், சயனசுகம், மாதர்நட்பு, போசனசுகம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், கற்பனை மிகுதி, தனவிரயம். |
| கன்னி | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சநதிப்பு, சயனசுகம், உறவினர் வருகை. |
| துலாம் | எடுதத காரியம் கைகூடும், நன்கொடை, பிரபுத்தனம், ஆரோக்கியம். |
| விருச்சிகம் | உத்தியோக பரிசம், எதிர்பாராத செலவு, நிர்ப்பந்த நிலை, வீண்பயம். |
| தனுசு | பொருள் விரயம், மனக்கவலை, அஜீரணகோளாறு, முயற்சி தாமதம். |
| மகரம் | மனோதைரியம், தேகநலன், மாதர் நட்பு, விருந்துபசாரம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், சுபநிகழ்வு, ஆரோக்கியம், சத்துரு ஜெயம். |
| மீனம் | அஜீரண ரோகம், காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம், பணக் குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## மதவாத சக்திகளை முன்னிறுத்தி நுரைச்சோலை மின் திட்டத்துக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பரப்பை பயன்படுத்தி போதைப் பொருள் மற்றும்ஆயுத விற்பனையில் ஈடுபடுவோரே நுரைச்சோலை மின் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு மதச்சார்பு சக்திகளை முன்நிறுத்தி எதிர்ப்புக்களை தெரிவிப்பதாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரு தசாப்த காலத்துக்கு முன் மின்வலுப் பிரச்சினை நிலையான தீர்வுகாணும் நோக்கில் நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையத்தின் தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டன.

இதன்மூலம் 900 மெகாவேற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது எனினும் போதைப் பொருள் மற்றும் ஆயுத விற்பனையாளர்கள் நுரைச்சோலை மின்நிலையத் திட்டத்தை திசைதிருப்பி மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளதாக மின் சக்தி அமைச்சு குற்றம்சாட்டியுள்ளது.

குறிப்பாக மின் நிலையம் நிறுவப்பட்ட பின் அது உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டால் கடற்படையின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு இவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதினா லேயே இதனை அவர்கள் எதிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

## இலவச மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு மற்றும் சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடாத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


கண், பல் மற்றும் நீரிழிவு, இரத்த அமுத்தம், சருமவியாதி போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் டாக்டர் எஸ். குகதாசனினால் கண் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அத்துடன் பார்வை குறைபாடு உடையவர் களுக்கு இலவச கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. (க-29)

## வீடுகள் நிர்மாணம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள காக்கைதீவுக் கிராமத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மைய நிதியுதவியுடன் வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வீடுகளும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், இதேவேளை இக் கிராமத்தில் உலகவங்கி நிதியுதவியுடனும் பல வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-49)









சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்காக கோப்பாய் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற உளநலப் பயிற்சிப் பட்டடையின் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட த.ஆ.ச. தலைவர் த.மகாசிவம் உரையாற்றுவதையும், சுனாமி மீள் நிர்மாண இணைப்பாளர் பசில் டி சில்வா, திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்குவதையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ரி. ராஜா, திலீவின்பன்)

# எமது பலத்தை செயலினூடாக உணர்த்துபவர்கள் நாங்கள்

## மட்டு.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன்



(கொழும்பு)

14 நாள் கால அவகாசம் கொடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை அறிந்து கொள்ளலாம் என்று மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் ஒலி வானொலியில் நேற்று முன்தினம் ஒலிபரப்பாகிய செய்திச் சுற்றோட்டம் நிகழ்ச்சியில் அவர் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கூறுகையில்,

ஜெனீவாப் பேச்சுக்களுக்குப்பின்னர் அரச படைகளால் எதுவித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக துணை இராணுவக் குழுக்களுடன் இணைந்து தாக்குதல்களை நடத்துகின்றன.

அரசாங்கத்தின் கடந்த காலங்களைப் பார்க்கும் போது ஏப்ரல் பேச்சுக்களுக்கு முன்னதாக இவர்கள் எதுவும் செய்யமாட்டார்கள் என்றுதான் கருதமுடிகிறது.

வவுணதீவு காவலரண் மீதான தாக்குதல் முஸ்லிம் ஒருவரது படுகொலை உள்ளிட்டவை தொடர்பில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் நாம் முறைப்பாடு செய்துள்ளோம். வவுணதீவு தாக்குதல் சம்பவம் நடந்தவுடனேயே கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

அதன் பின்னர் துணைக் குழுக்கள் மற்றும் அரச படைகளின் செயற்பாட்டை மிகக் கடுமையாகக் கண்டித்து கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக் லெண்ட் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். தற்போது நடந்துள்ள படுகொலை தொடர்பிலும் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளோம். உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு தலைமையகம் எமக்குத் தெரிவித்துள்ளது.

மேலும் அண்மைக்காலமாக இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கின்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து அமைதிப் பேச்சுக்களின் ஊடாக தமிழீழத்தை உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் பொதுமக்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு நாம் பதில் தாக்குதல்களை நடத்தவில்லை. சர்வதேச சமூகத்தின் மீதான மதிப்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் விதமாக நாம் பொறுமை காத்துக்கொண்டிருக்கின்றோம் பொறுமையின் உச்சத்திலிருக்கிறோம்.

ஜப்பானிய தூதுவர் அண்மையில் அரசாங்கத்துக்காக வழங்கப்படும் சர்வதேச நிதியை எப்படி துஷ்பிரயோகம் செய்கிறது என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறார். அடுத்து ஏப்ரலில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. சர்வதேசம் இப்போது உண்மை நிலைகளை உணர்ந்து செயற்படுவதால் எமதும் எமது மக்களினதும் உச்ச பொறுமை நிலையில் மாற்றம் ஏற்படும் என நம்புகிறோம்.

சிறுவர் படைச்சேர்ப்புத் தொடர்பில் தொடர்ந்து அரசாங்கம் பொய்யான பரப்புரையை மேற் கொண்டு வருகிறது. ஜெனீவா பேச்சுக்களில் எமது பேச்சுக்குழுவினர் இந்த விடயத்துக்குப் பதில் கொடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் சிறார்களுக்கான பாடசாலைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் என பல உருவாக்கப்பட்டு அவற்றினூடே அவர்களின் எதிர்காலம் வளர்க்கப்பட்டு வருவதை குற்றச்சாட்டாக கூறுகின்றவர்கள் நேரிலேயே வந்து பார்க்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கில் போரைத் தொடங்குவதற்கு கூட பலமற்றவர்கள் என்று சிங்களப் பேரினவாதிகள் பேசி வருகின்றனர்.

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருக்கின்றார்களா இல்லையா என்பதை 14 நாள் கால அவகாசம் கொடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகிக்கொண்டால் புரிந்துகொள் வார்கள். எமது பலம் குறித்து நாம் சொல்பவர்கள் இல்லை எமது செயல்களே பேசும்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் நாம் அரசியல் அலுவலகங்களை இயக்காவிட்டாலும் அப் பிரதேசத்தில் உள்ள மக்களுடனான தொடர்புகளை ஏற்படுத்தி எமது அரசியல் பணிகளை நாம் தொடர்ச்சியாக செய்து வருகிறோம்.

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் உள்ள அதி உயர்பாதுகாப்பு வலயமான வெலிக்கந்த அருகில் உள்ள தீவுச்சேனையில் இயங்கும் துணை இராணுவக் குழுவினரது முகாமில்தான் வைத்திருப்பதாக தகவல் கிடைத்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் தமது பணியாளர்களை விடுவிக்க பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அரசாங்கம் இதயசுத்தியோடு இந்தப் பிரச்சினையில் செயற்படவில்லை. தீவுச்சேனையில் இராணுவ முகாமுக்கு அருகே இருந்த துணை இராணுவக் குழுவினரது முகாமை கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட்டு வந்தனர். அதன் பின்னர் அந்த இடத்துக்குச் சென்ற இராணுவ அதிகாரி சமரக்கோன் என்பவர் அந்த முகாமையே அகற்றி சுத்தம் செய்துவிட்டு முகாமே இல்லை என்றார்.

மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றி வைத்திருக்கிறோம். அரசாங்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சியை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்து கொண்டனர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே பிரச்சினையை தோற்றுவிப்பதற்காக முஸ்லிம்களின் தொப்பி அணிந்து அரச புலனாய்வுத் துறையினர் தாக்குதலை மேற்கொள்வதை இரு தரப்பு மக்களும் புரிந்து கொண்டனர். ஏறாவூர் தாக்குதலின் போது மக்கள் சரியாகவே செயற்பட்டனர். அதனால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களது உறவு சீராக உள்ளது என்றார். (தி)

# சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவை வழங்குவது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என்று கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்குமிடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த உறுதி மொழியை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஏறாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அனுபவங்களின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான கோட்பாடுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த வகையில் மூவின மக்களும் சமத்துவமான உரிமைகளை அனுபவிக்கும் வகையில் ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்புகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை எதிர்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வழங்கவுள்ளது என்றும் கூறினார்.

இதேவேளை, அரசாங்கத்திற்கும் முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையில் தொடர்ச்சியான சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுவருகின்றன.

சமாதான முயற்சிகள், அரசியல் பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நிர்வாக விடயங்கள் ஆகியன 4 அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக பசீர் சேகுதாவுத் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் சமூகம் தனித்தரப்பாக கலந்துகொள்வதற்கு அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அனுமதி அளிக்க வேண்டும் என்றும், அவ்வாறில்லாவிட்டால் சமாதான நடவடிக்கைகளுக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-9)

# நோர்வேயின் சமாதானப் பணி தொடர அரசு அனுமதித்தமை வரவேற்கத்தக்கது

## ஐ.தே.க.பிரதி பொதுச் செயலாளர்



(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளில் நோர்வேயின் அனுசரணைப்பணி குறித்து காலம் தாழ்த்தியாவது அரசாங்கம் விளங்கிக் கொண்டமை வரவேற்கத்தக்கது என்று ஐ.தே.க வின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எந்த விடயத்திலும் யதார்த்தத்தை மீறி யாராலும் செயற்பட முடியாது என்பதனை நோர்வே தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள முடிவு நிரூபிக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

சமாதான செயற்பாடுகளில் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்ந்து பெறப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலின் போது மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்தார் அதன் போது சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து நோர்வே அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தன.

ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் செய்து கொண்ட உடன்படிக்கையிலும் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சமாதான செயற்பாடுகள் விடயத்தில் யதார்த்தத்தை மீறி செயற்பட முடியாது என்பதனை அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளது. இதனை இதற்கு முன்னரே அறிவித்திருக்கலாம்.

இதன் பின்னராவது அரசாங்கம் ஜே.வி.பியினதும் ஹெல உறுமயவினதும் பேச்சைக் கேட்டுக்கொண்டு மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்காமல் இருக்கவேண்டும் என்றார். (க)

# யாழ். குடாநாட்டில்

## 10 வீதமானவர்களே தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்தனராம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குரிய



தேர்தல்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 10 வீதமானவர்களே விண்ணப்பித்திருப்பதாக யாழ். தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 20 ஆயிரம் அரச ஊழியர்கள் குடாநாட்டிலும் குடாநாட்டுக்கு வெளியிலும் கடமை புரிகின்றபோதும் அதிகமானவர்கள் தபால்மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

மேற்படி தேர்தல்களில் எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் 3 வாரங்கள் இருக்கின்றபோதிலும் குடாநாட்டில் சுவரொட்டிகளோ பிரசாரங்களோ நடைபெறவில்லை. மொத்தத்தில் மக்கள் தேர்தலில் கலந்துகொள்வது பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனாலும் யாழ். தேர்தல் செயலகத்தில் அனைத்து வேலைகளும் மும்மரமாக நடைபெறுவதுடன் மேலதிக பணியாட்களைக் கொண்டு தேர்தல் பணிகள் விரைவு செய்யப்பட்டு வருகின்றன. (க)

# இலவச மருத்துவமுகாம்

தீவக அரிமாக் கழகத்தினால் நடாத்தப்படும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குபுளியங்கூடல் யாழ். வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இலவச கண்ணாடி வழங்கல், மருந்து வழங்கல் மற்றும் நீரிழிவு பரிசோதனை, பொது மருத்துவம், முதியோர் இல்ல அங்கத்தவர்களை கௌரவித்தல், கற்றல் உபகரணங்கள் வழங்கல், நுளம்பு வலை வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (க-9)

# இன்று ஒரு தகவல்

## சண்டையை நிறுத்தும் வழி

ஒரு கணவன்-மனைவிக்கிடையில் எப்போதும் சண்டை வந்து கொண்டேயிருந்தது. இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? நான் அதற்காகச் சொல்ல வரவில்லை இது வேறு விடயம். அதாவது சண்டை பிடிக்காமல் இருப்பதற்கு வழி சொல்லும் தகவல் இது.

நான் சொன்ன அந்தக் கணவன் மனைவி எப்படியென்றால்... கணவன் ஒரு வார்த்தை சொன்னால்... மனைவியிடமிருந்து இரண்டு வார்த்தை பதிலாக வரும். இப்படி வார்த்தைகள் பெரு கிப்போய் கடைசியில் வம்பில் வந்து முடியும். மனைவி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்... அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பக்கத்து வீட்டிலும் ஒரு கணவன் மனைவி இருந்தார்கள்.அவர்களுக்குள் சண்டை வருவதிலலை. அது எப்படி அவாகளால் மட்டும் சண்டை பிடிக்காமல் இருக்க முடிகிறது என்று இவருக்கு ஆச்சரியம்.

ஒருநாள் நேராக பக்கத்துவீட்டு அம்மாவிடம் போய் "ஏன் அம்மா... நீங்கள் எப்படி கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்... அது எப்படி முடிகிறது உங்களால் ?" என்று கேட்டார். "அதற்கென்று ஒரு மருந்து இருக்கிறது... அதை சாப்பிட்டால் சண்டைவராது" என்றார் அவர். "சரி... அந்த மருந்தை அவர் சாப்பிடமாட்டேன என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? " என்று கேட்டார் இவர். "அந்த மருந்து அவருக்கு இல்லை உனக்குத் தான்" என்றார் அவர்.

"அப்படியா... அப்படியென்றால் மிகவும் நல்லது. அதை எப்படி சாப்பிடுவது என்ற விபரத்தைச் சொல்லுங்கள்... எங்கே அது கிடைக்கும் என்பதைச் சொல்லுங்கள்" என்று கேட்டார் இவர். "வேறு எங்கும் போய் வாங்க வேண்டாம் என்னிடமே அந்த மருந்து இருக்கிறது. அதில் கொஞ்சம் தருகிறேன் வாங்கி வைத்துக்கொள். உன் கணவர் உன்னோடு சண்டையை ஆரம்பிக்கும் போதெல்லாம் நீ இந்த மருந்தில் ஒரு அவுன்ஸ் வாயில் ஊற்றிக்கொள்ள வேண்டும். அதை உடனே குடித்து விடக்கூடாது. ஐந்து நிமிடமாவது வாயில் வைத்திருக்க வேண்டும். அதன் பின் குடித்து விடலாம்"என்று கூறி ஒரு போத்தல் மருந்தைக் கொடுத்து அனுப்பினார்.

மருந்தை எடுத்துக்கொண்டு இவர் வீட்டுக்கு திரும்பி வந்தார். வீடு பூட்டியிருந்ததால் கணவன் வந்து வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான். மனைவியைக் கண்டதும் சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டான் "வீட்டைப் பூட்டிவிட்டு எங்கே போனாய்? எவ் வளவு நேரமாக ஒரு மனிதன் வாசலிலேயே காத்துக்கொண்டு கிடப்பது? " என்று மனைவி இதற்கு பதில் கூறவில்லை... வீட்டைத்திறந்து சமையல் அறைக்குள் போனார்... ஒரு அவுன்ஸ மருந்தை வாயில் ஊற்றிக்கொண்டார். அன்று மேற்கொண்டு சண்டை வளரவில்லை... நின்று விட்டது மருந்து பரவாயில்லை.

அதன் பின்பு பல சந்தர்ப்பங்களில் சண்டை வரக்கூடிய நேரங்களில் எல்லாம் இந்த மருந்து அதை நிறுத்தியிருக்கிறது. "பிரமாதமான மருந்தாக இது இருக்கிறது... இதைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டியது தான்" என்று முடிவு செய்துகொண்டு இவரது மனைவி மறுபடியும் பக்கத்துவீட்டுப் பெண்ணிடம் போனார். "எவ்வளவு விலை யானாலும் சரி... நான் காசு கொடுத்து வாங்கி வைத்துக்கொள்கிறேன் எந்தக் கடையில் இது இருக்கிறது சொல்லுங்கள்" என்று கேட்டார். "இந்த மருந்துக்கு விலையே கிடையாது. இலவசமாகவே கிடைக்கும்" என்றார் அவர். "அது எப்படி விலையில்லாமல் இதை விற்க முடிகிறது? " என்று கேட்டார் இவர். "அது மருந்தாக இருந்தால் தானே விலை வேண்டும்? அது வெறும் தண்ணீர் தானே" என்றார். "வெறும் தண்ணீரா சண்டையை நிறுத்தியது?" என்று கேட்டார் இவர். "அது சண்டையை நிறுத்தவில்லை... உனது மௌனம் தான் சண்டையை நிறுத்தியது. நீ வாயில தண்ணீர் வைத்திருப்பதால் எதிர்த்துப் பேசுவதில்லை. அதனால் உன் கணவனின் கோபம் சாந்தமாகிவிட்டது" என்றார் அவர்.

இந்தக் கதையில் இருந்து சண்டையை நிறுத்தும் மருந்து எது என்று தெரிந்து கொண்டீர்களா? இதை நானும் தெரிந்து கொண்டு போத்தல்களில் ஊற்றி வைத்துக் கொண்டு என்னிடம் வருவோருக்கு சிபார்சு செய்திடலாம் என்று உட்கார்ந்திருந்தேன். ஒரு பெண்மணி வந்தார். "எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி சண்டை வருகிறது" என்றார். "கவலைப்படாதே! நான் ஒரு மருந்து தருகிறேன்" என்று சொல்லி ஒரு போத்தலை எடுத்துக்கொடுத்தேன். அதில் இருப்பது தண்ணீர் என்று சொன்னால் அதன் மீது ஒரு மரியாதை வராது அல்லவா? அதனால் சொல்லவில்லை.

அந்தப் பெண்மணி வாங்கிக்கொண்டு போய் நான்கு நாட் கள் கழித்து திரும்பி வந்தார். "என்னம்மா... வீட்டில் சண்டை நின்று விட்டதா?" என்று கேட்டேன். "அங்கே நின்று விட்டது...இப்போது உங்களிடம் ஆரம்பம்" என்றார். "என்ன...?" என்றேன் பயந்து போய். "பின்னே என்ன...? நீங்கள் என்ன மருந்து கொடுத்தீர்கள்? " என்றார் கோபமாக. "அது வெறும் தண்ணீர் தானே" என்றேன். "தண்ணீரா இது? ... நன்றாகப் பாருங்கள்" என்று அந்தப் போத் தலை நீட்டினார்.வாங்கிப் பார்த்தேன். அதன் பின் தான் விஷயம் புரிந்தது. நான் தவறுதலாக எங்கள் வீட்டில் இருந்த மண்ணெண் ணெய் போத்தலை அவரிடம் கொடுத்திருக்கிறேன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குடும்பத் தலைவிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் அமுலுக்கு!

(கொழும்பு)

தொழில் செய்யாது குடும்பத் தலைவிகளாக வீட்டிலிருக்கும் பெண்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சுமேதா ஜி. ஜயசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய நிலையில் நாட்டில்பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்குமுகம் கொடுத்து வருகின்றனர். அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. தனியார் மற்றும் அரச அலுவலகங்களில் பெண்கள் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் வேறு பல இடைஞ்சல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். எனவே அவற்றைத்தடுக்கும் முகமாக அலுவலகங் களில் பாலியல் குற்றத் தடுப்புப் பிரிவுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக அரச அலுவலகங்களிலும் தொடர்ந்து தனியார் அலுவலகங்களிலும் இந்த பிரிவுகளை அமைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்

அத்துடன் பெண்களுக்கான அரசியல் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் இதற்கு மஹிந்தவின் சிந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் செயல்வடிவம் பெறவேண்டும்.

பெண்களின் பங்களிப்பு பல்வேறு துறைகளுக்கும் தேவைப்படுகின்ற காலமாக இக் காலமுள்ளது. இலங்கையில் 70 சதவீதமான பெண்களுக்கு எழுத மற்றும் வாசிக்கத் தெரியும் என்பது ஓரளவுக்கு மகிழ்ச்சியடையக்கூடிய விடயமாகும்.

தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். இதேவேளை சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் யுவதிகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். (க-9)

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவராக மாவை

## நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டதற்கு தமிழ் கூட்டமைப்பு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த எதிர்ப்புக்குறித்து பதிலளித்த ஜனாதிபதி யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவராக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவை நியமிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமாக தேர்தல் ஆணையாளரின் ஆலோசனை பெறப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் தொடரும் மீனவர்களுக்கு எதிரான கெடுபிடிகள் இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதியில் யாழ்ப்பாணம், வன்னி மாவட்ட மாணவர்களின் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டமை, விமானத்தளத்தில் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் அவமதிப்பு செய்யப் பட்டமை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப் பட்டுள்ளன. பல்கலைக்கழக அனுமதி குறித்து கல்வியமைச்சருடன் சந்திப்பைஏற்படுத்த இணக்கம்தெரிவித்திருக்கும் ஜனாதிபதி சாதகமான நிலையை ஏற்படுத்த இணங்கியிருப்பதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (கு-9)

# வன்னித் தொழில் நுட்பவியல்— நிறுவகத்தின் பட்டமளிப்பு விழா









(கிளிநொச்சி)

வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகத்தின் இரண்டாம் ஆண்டுபட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

முதன்மைச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.ரெஜி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். வன்னி தொழில்நுட்ப நிறுவனத் தலைவர் பாலா துரைரட்ணம் தலைமையில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்சோ. தங் கன் சிறப்புரையினை நிகழ்த்தினார்.

கற்கை நெறியினை நிறைவு செய்த மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி திருமதி மகேஸ்வரன் பட்டங்களை வழங்கி சிறப்பித்தார். 42 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. பட்டமளிப்பு விழாவில் தமிழீழ அரசியல் துறைப் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் உரையாற்றுகையில் தமிழர் தாயகத்தில் தொழில்நுட்பவியல் அறிவு சார்ந்த மனித வளத்தை உருவாக்குவதில் வன்னித் தொழில் நுட்பவியல் நிறுவனம் பெரும் பங்கு வகிக்கிறது. வன்னித்தொழில்நுட்பவியல் நிறுவனமானது எங்கள் தாயகதேசத்திலேயே உருவாக்கப்பட்டு சிறந்த தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகிறது.

தொழில்நுட்பவியல்கல்வியை நிறைவு செய்தவர்கள் தாயகத்தேசத்தின் தொழில் நுட்பவளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுவார்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. போர் நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் வன்னியில் தொழில்நுட்பவியல் நிறுவனம் தொடங்கப்பட்டு பல மாணவர்களுக்கு தொழில் நுட்ப வியல் கல்வியை கற்பதற்கான வாய்ப்பினை இந் நிறுவனம் வழங்கியது. எதிர்காலத்திற்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் தொழில் நுட்பக்கல்வி உதவி புரியும். வன்னிப் பெரு நிலப்பரப்பிலேயே தொழில் நுட்ப அறிவியல் சார்ந்த ஒரு வளத்தை உருவாக்குவதில் வன்னி தொழில் நுட்ப நிறுவனம் பெரும் பங்கு வகிக்கிறது என்றார். (த-4)




# சுன்னாகம் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய இரதோற்சவ விழா 12-03-2006









## ஆசிச் செய்தி



ஆரோக்கியம், நீண்ட ஆயுள், குறைவில்லாத செல்வம், செயல்கள் யாவிலும் சிறப்புடன் செழிக்க! 'தானார்த்த சித்திப்ரதாம் நானா புஷ்ப வரா ஜிதாங்ரியுகளாம் நாராயணேனார்ச்சிதாம் நாதப்ரஹ்ம மயீம் பரத் பரதாம் நானார்த்த தத்வாத்மிகாம் மஹமாரி ப்ரணதோஸ்மி ஸந்தத மஹம் காருண்ய வாராம் நிதிம்!!'

பக்திமிக்க யோகிகள், முனிவர்களின் இதயத்தில் வசிப்பவளும், சர்வார்த்தசித்தியைக் கொடுக்கக்கூடியவளும், வண்ண வண்ணப் பூக்களால் அர்ச்சிக்கப்படுகிற இரண்டு பாதத் தாமரைகளையுடையவளும், நாதபிரம்மமானவளும், எல்லாப் பொருள்களுக்கும் மேம்பட்டவளும், தத்துவப் பொருளானவளும், சர்வவேதாந்தங்களின் சாரமானவளும், கருணை கடலானவளுமாகிய வருஷப்புலம் மஹாமாரி அம்மனை வணங்கி இவ்வருடம் மாசிமாதம் மகம் நட்சத்திரப் பெருநாளை தீர்த்த உற்சவமாக கொண்டு நடைபெறுகின்ற மஹோற்சவத்தில் ஒன்பதாவது தினமான இரதோற்சவம் பக்தர்களின் பாவ புண்ணியங்களை மேம்படுத்தும் திருவிழாவாகக் கருதப்படுகிறது.

இம் மஹோற்சவத்தில் அனைத்து பக்தர்களும் அம்பாள் அருட்கடாட்சம் பெற்று பெருவாழ்வு வாழ இறைவியின் பாதங்கள் பணிவோம்!

**சிவஸ்ரீ நா.குகனேசக்குருக்கள், ஆலய குரு.**

## ஆலய வரலாறு

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்டதும் தேவாரங்களிலும் புராணங்களிலும் விதந்துரைக்கப்பட்டதுமான இலங்காபுரியின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். யாழ்.குடாநாட்டின் மத்தியில் அமைந்த ஊர் சுன்னாகம்.

சித்தர்களும் புலவர்களும் பக்திமான்களும் தமிழும் சைவமும் வளர்த்த சுன்னாகத்தின் வடபால் அமைந்துள்ள பதிதான் வருஷப்புலம். முக்கனிச் சோலைகளும் முகிழ் வெடிக்கும் மலர்ச் சோலைகளும் நிறைந்துள்ள இப்பதியில் வெள்ளவாய்க்கால் ஓரமதில் மகாமாரி கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள்.

பல்வகைச் சிறப்புக்களுடன் மிளிரும் வருஷப்புல மகாமாரியின் கோயில் தோற்றம் பற்றி சிறிது பார்ப்போம்.

இற்றைக்கு முன்நூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது இலங்கையில் ஆங்கிலேயர்கள் ஆட்சி தொடங்கிய காலத்துக்கு முன் இவ் வருஷப்புலத்தில் ஓர் அற்புதம் நடந்தது.

அக்காலத்தில் இலங்கை மக்களை அடிக்கடி அம்மை, வாந்திபேதி போன்ற நோய்கள் தாக்கி வந்தது. இதனால் பலர் இறந்து போனார்கள். அப்படி இறந்தவர்களைத் தங்கள் காணிகளுக்குள்ளே புதைக்கும் வழக்கம் அன்று இருந்து வந்தது. வருஷப்புலச் சிற்றூரிலும் இந்த நோயால் பீடிக்கப்பட்டுப் பலர் இறந்து போனார்கள். மருந்துகள் கிடைக்காத பட்சத்தில் தெய்வங்களையே நம்பி வழிபட்டனர். அன்று ஒரு கன்னிப் பெண் இந்த நோயால் திடீரென இறந்துவிட்டார். மாலை நேரம் இறந்ததால் அப்பெண்ணின் உறவினர்கள் அடுத்தநாள் புதைக்கலாமென்று பிரேதத்தை பாயினால் சுற்றி திண்ணையின் ஓரத்தில் வைத்துவிட்டார்கள். அடுத்த நாள் எழுந்து பார்த்தபொழுது பாயினால் சுற்றப்பட்ட பெண் திண்ணையில் குந்திக்கொண்டு இருந்தாள். இதனைக்கண்டு உறவினர்கள் பயந்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள். செய்வதறியாது நின்றார்கள்.

அவ்வேளை அந்தக் கன்னிப் பெண் வீட்டிலுள்ளவர்களைப் பார்த்து நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் இனிமேல் நோய்கள் எதுவும் உங்களைத் தாக்காது நான் காப்பாற்றுவேன். நீங்கள் என்னை ஆதரித்தால் போதும் என்று சொல்லி மாயமாய் மறைந்துவிட்டாள்.

இதனை அம்மனின் திருவாக்கு என்று உணர்ந்த ஊரவர்கள் கொட்டிலொன்று கட்டி கல்நட்டு மகாமாரியென வழிபடத் தொடங்கினர்.

இதன் பின் ஊரவர்கள் சுண்ணாம்புக்கல்லால் சிறு கோயில் அமைத்தனர். தினமும் விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினர். காலப்போக்கில் பெரியோர்களின் முயற்சியால் இக்கோவில் பல சிறப்புக்கள் பெற்ற ஸ்தலமாக மிளிர்கிறது.

**தகவல்:-திருமதி செல்லப்பா பூரணம்மா**
**திருமதி முருகேசு நாகேஸ்வரி**
**திருமதி இராசா சின்னம்மா**
**திருமதி சுப்பிரமணியம் இராஜேஸ்வரி.**

## போற்றி வணங்குவோம்



ஆன்மாக்கள் இலயப்படும் இடம் ஆலயம் என்பர். இந்த ஆலயங்கள் இல்லாத ஊரில் யாரும் குடியிருக்க மாட்டார்கள் என்றும் சொல்வர்.

கனிவளமும், சோலைகளும் நிறைந்த புண்ணிய பூமியாகிய வருஷப்புலத்தில் கோயில் கொண்டிருக்கின்ற எங்கள் மகாமாரி எல்லோரையும் காத்து வாழ வைக்கின்றாள்.

ஆண்டுதோறும் மஹோற்சவங்களும், விசேட சங்காபிஷேகங்களும் மற்றும் நேர்த்தி அபிஷேகங்களும் குறைவில்லாமல் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில் மூர்த்தி சிறிதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது. பல்லாயிரக்கணக்கானோர் மகாமாரியை வழிபட்டு செல்வச் செழிப்போடு வாழ்ந்து வருகிறார்கள். இங்கு அமைந்திருக்கும் ஆதிமூல அம்பாள் எப்பொழுதும் ஜெக சோதியாய் காட்சி கொடுத்து அருள் பாலிக்கின்றாள்.

இன்று சித்திரத் தேரேறி வருகின்ற மகாமாரி அம்பாளின் அருளினை வேண்டி போற்றி வணங்குவோமாக!

**சோ.சபாரத்தினம், தலைவர்**

## வழிபடுவோம்

வருடாந்த மஹோற்சவத்தில் தீர்த்தத்திற்கு முதல் நாள் தேர்த் திருவிழா வருவது மரபாகும். இத்தகைய தேர்த்திருவிழா இறைவனின் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலைக் குறிக்கும் என்று நூலோர் சொல்வர்.

ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் மலபந்தத்தை அறுத்தலையே அழித்தல் என்று சொல்வார்கள்.

வருஷப்புல மகாமாரிக்கு இன்று தேர்த்திருவிழா. அடியார்கள் யாவரும் ஒன்று கூடி வழிபடுவோம். வேண்டிய செல்வங்களை அம்பாள் எமக்குத் தருவாள்!

**ச.ஸ்ரீகரன், செயலாளர்.**

மலரமைப்பு: **சஞ்சீபன், கோபி**

### தேசத்தைக் காக்க தேரேறி வருவாய்!

மனிதமனம் மாண்புறவும்
புனிதமெங்கும் நிறைந்திடவும்
ஒளி வீசும் ஜோதியாய்
தேரேறி நீ வருவாய்
தேசத்தைக் காத்திடுவாய்!
வளமான எதிர்காலம்
வருமாண்டில் தந்திடுவாய்
வருஷப்புல நாயகியே – எமை
வருசமெல்லாம் காத்திடுவாய்
வரம் வேண்டி வருவோரின்
குறை தீர்த் தருள்வாயே!

வாணி

### எம்மை அரவணைப்பாய்!

*வருஷப்புலப் பதியினில் என்றுமே*
*வீற்றிருக்கும் மகாமாரி அம்மையே*
*தினமுனை தொழுது வந்தோம்*
*திருவடியில் மலரினை தூவியே!*

*ஆதிசிவன் துணையாய் இருப்பவளே*
*ஆதிபரா சக்தியாய் நிறைபவளே*
*அம்மா வென்றுனை அழைப்பவர்க்கு*
*அனுதினமும் காட்சி தருபவளே!*

*குழந்தையின் குரல்தனை கேட்டுமே*
*கோலத் தோற்றத்தில் வந்திடுவாய்*
*எம்மையே அரவணைத்து காத்திடும்*
*அம்மையே வருஷப்புல நாயகியே!!*

சு.சிவகுமார்

### வருஷப்புல நாயகியே!

எடுப்பு

வாய்க்கால் ஓரமதில் வளமாய் கோயில்கொண்ட
வருஷப் புலமிசீர் வடிவழகி மகமாரி

தொடுப்பு

காய்க்கும் பலாவொடு கனிவளர் சோலை நிறை
கண்ணழகு மகமாரி காத்தருளும் சுகமாரி

முடிப்பு

அபிடேக நாயகியே அலங்கார ரூபினியே
குவிந்திடும் அடியார்க்கு குறையிலா வளமருளும்
பவித்திர நாயகியே படர்சடை நங்கையே
கவித்துவம் உன்மேனி காணுமொளி எமக்கின்பம்

சங்கா அபிடேகம் தாராளம் காண்கின்ற
சிங்கார நாயகியே திருவுலா நாயகியே
சங்காரம் செய்துமே அடியார்க்கு வாழ்வுதரும்
சிங்காசனம் கொண்ட திருமாரி மகமாரி

கலாபூஷணம் சு.துரைசிங்கம்

## மலர் சிறக்க அனுசரணை வழங்குவோர்


**நாதன் சகோதரர்**
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்

**ஸ்ரீ ராம் அக்றோ மாட்**
இல.26, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்

**ஜெய கிருஸ்ணா**
இல.20, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்

Multilac Colour Bank
ஏகவிநியோகஸ்தர்
**கந்தவேலன் ரேடஸ்**
இல.110, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P. No: 021 222 2282

டிலக்ஸ்
தொலைத்தொடர்பகம்
24, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்

**விமல் ஒலி, ஒளி அமைப்பாளர்**
ஐயனார் கோவிலடி,
மல்லாகம்

**தாருகன் பன்ஸ் ஹவுஸ்**
இல.72 சுப்பிரமணிய வீதி,
(பஸ் தரிப்பு நிலையம்)
சுன்னாகம்.

கட்ட பொருள்கள் விற்பனை நிலையம்
**சேது விற்பனை நிலையம்**
கோண்டாவில் வீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய்.
இல.57, மனிங் பிளேஸ் வெள்ளவத்தை, கொழும்பு - 06
T.P.:0112360714

**ஸ்ரீ மகாமாரி லைற்**
வருஷப்புலம்,
சுன்னாகம்

**றஞ்சனாஸ் புடவையகம்**
இல.04, மத்திய சந்தை,
சுன்னாகம்

**ஸ்ரீ சக்தி பதிப்பகம்**
ஐயனார் வீதி,
மல்லாகம்

**சேது வீடியோ விஷன்**
இல.57A, மனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
T.P.:0112360615

**விஜைல்ஸ் கல்விநிலையம்**
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

**காங்கேசன் பேக் ஹவுஸ்**
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

**பைன் செலக்ஷன்**
இல.77, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்


**சேது ரவல் அன் ரான்ஸ்போட்**
இல.57A, மனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
T.P.:0112360615

ஏற்றமிகு ஜவுளிகளின்
எழில் மிகு காட்சியகம்
**மங்கை சில்க்ஸ்**
இல.02, நவீன சந்தை,
சுன்னாகம்

**மகாமாரி அரைக்கும் ஆலை**
மீசாலை வடக்கு,
கொடிகாமம்

# ஜெனீவா பேச்சும் சர்வகட்சி மாநாடும்





ஏப்ரல் மாதம் ஜெனீவாவில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கான சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதா என்பது இன்னும் சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது. குறிப்பாக ஜெனீவா பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்த அரசதரப்பு, போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்த கருத்தானது ஏற்படுத்திய சர்ச்சை இன்னும் ஓயவில்லை.

இதற்கிடையில் வவுணதீவில் புலிகள் மீது இடம்பெற்றுள்ள தாக்குதலானது ஜெனீவா பேச்சுக்களின் பிரதிபலனையும் வெளியிட்ட கூட்டறிக்கையினையும் கேலிக்குரியதாக்கியுள்ளது.

பேச்சின் போது சர்வதேசத்திற்கு முன்னால் உறுதியளித்த ஒரு விடயத்தையே தம்மால் செயற்படுத்த முடியாது என்ற இயலாமையை அரசாங்கம் வெளிப்படுத்திய நிலை தோன்றியுள்ளது.

– என். ஜீவேந்திரன்

மேலும் கடந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கால பேச்சுக்களின் போது காணப்பட்ட சுமூகத்தன்மை இம்முறை ஜெனிவா பேச்சுக்களில் காணப்படாத நிலையில் இந்த சிக்கல்கள் எதிர்கால பேச்சுக்களை பாதிக்க வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாடு ஓரளவு நிலைமையை மேம்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. குறிப்பாக ஜேவிபி ஹெல உறுமய கட்சிகளது எதிர்ப்பினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாளித்துள்ளதாகவே தெரிகிறது.

ஜே.வி. பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் இவ்விடயத்தில் மிகவும் கபடத்தனமாக நடந்து கொண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

ரணில் விக்கிரமசிங்க இதே போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்திய போது நாட்டைக்காட்டிக்கொடுப்பதாக வீதிக்கு இறங்கிய இக்கட்சிகள் தற்போது அறிக்கைகளுடன் தமது எதிர்ப்பினை மட்டுப்படுத்திவிட்டன.

எவ்வாறெனினும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இச்சூழல் சாதகமானதொன்றே. இவ்வாறான ஒரு சர்வகட்சி மாநாடு ஒன்றின் மூலமாக சகல கட்சிகளதும் அபிப்பிராயத்தைப் பெற்று பேச்சை நடத்துவதாக அவரால் காட்டிக்கொள்ள முடியும். அதேபோல இனிவரும் பேச்சுக்களில் கட்சிகளின் பிரதிநிதிகளை அவதானிகளாக அனுமதிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

இவ்வாறான விடயங்கள் மூலம் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிலைமைகளை சமாளித்தாலும் விடுதலைப்புலிகளை சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமே.

குறிப்பாக உறுதியளித்தபடி போர்நிறுத்த உடன்படிக்கையை பேணி நடக்க முயன்றால் மட்டுமே ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள பேச்சு பலனைத்தருவதாக அமையும்.

இதற்கிடையே ஜெனீவாவில் அரசதரப்புக்கு புலிகளால் கையளிக்கப்பட்ட துணைப்படைகள் குறித்த விபரம் ஆங்கிலப்பத்திரிகையொன்றில் வெளியானமையானது தேசத்துரோக செயலாக ஜே.வீ.பி கட்சி கூறுகிறது. அரச தரப்பிலிருந்தும் சிலர் ஏறத்தாழ இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர். இச் செயற்பாடானது ஊடகங்கள் மீது அதிகாரத்தரப்புகள் காட்டுகின்ற அழுத்தத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

எவ்வாறெனினும் தமக்கு ஆதரவாக எழுதும் போது ஊடகங்களை பாராட்டுவதும், தாம் பாராளுமன்றத்தில் எதிர்தரப்பில் இருக்கும் போது ஊடகங்களை ஜனநாயகத்தின் தூண்களாக போற்றுவதும், பின்னர் ஆட்சிக்கு வந்ததும் தமது ஊழலை அம்பலப்படுத்தும் ஊடகங்களை திட்டித் தீர்ப்பதும் இந்த அரசியல் வாதிகளுக்கு வழமையாகிப் போய்விட்டது.

## கண்டது.. கேட்டது.. படித்தது..

### வன்முறையும் கல்வியும்

வன்முறையும் கல்வியும் என்பதை வெவ்வேறு பரிமாணங்களில் நோக்க முடியும். ஒரு பரிமாணம் என்ன வென்றால் கல்வியினூடாக எவ்வாறு வன்முறை பரவலாம் என்பதை நோக்கல்.

கல்வியினூடாக எவ்வாறு வன்முறை பரவலாம்? படிக்கின்றார்கள், வேலை இல்லாமல் போகிறது. வேலை கேட்கிறார்கள், வேலை தரவில்லை. எனவே, வன்முறையில் இறங்குகிறார்கள். ஆனால், நான் அதைப் பற்றி இங்கு பேச வரவில்லை. இன்னுமொரு வடிவிலும் நோக்கலாம். வன்முறையை தவிர்த்துக் கொள்வதற்கு எவ்வாறு கல்வியைப் பயன்படுத்தலாம்?

இந்த நாட்டிலே இன ஒற்றுமை குலைந்து விட்டது. இனங்களுக்கிடையே பிரச்சினை தோன்றிவிட்டது. ஏன் அவ்வாறு என்றால் அதற்கு காரணம் இந்த கல்விமுறைதான். கல்வி முறையிலே நாங்கள் சிறந்த அறிவை, இன ஐக்கியத்திற்கு சாதகமான உணர்வுகளை, சிறந்த மனப்பான்மையை எங்களுடைய கல்வியூடாக நாங்கள் ஊட்டவில்லை எனவேதான் இன வேறுபாடுகள் தோன்றுகின்றன. வன்முறை பிறக்கின்றது என்ற ஒரு கருத்தையும் பலர் முன்வைக்கிறார்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அதைப் பற்றியும் கூற விரும்புகின்றேன்.

சில புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வன்முறையை தூண்டும் சந்தர்ப்பங்களும் உண்டு. இலங்கையில் 1970இன் பின் பல்கலைக்கழக அனுமதியில் புள்ளிகளைத் தரப்படுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முக்கிய விஞ்ஞானப் பயிற்சி நெறிகளில் தமிழ் மாணவர்களின் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது. உயர் கல்வி வாய்ப்புகளைக் கணிசமாக இழந்தமையால் தமிழ் இளைஞர்கள் அடைந்த விரக்தி நிலையும் தமிழர் அரசியல் வன்முறைப்படுத்தப்பட்டமைக்கு ஒரு முக்கிய காரணம் எனக் கருதுவோர் உள் பல்கலைக்கழக வாய்ப்புகள் போதிய அளவுக்கு, தேவைக்கு ஏற்ப விரிவு செய்யப்படாமை தென்னிலங்கையில் வன்முறை அரசியலில் இளைஞர் ஈடுபடத் தூண்டிய ஒரு காரணியென இளைஞர் அமைதியின்மையை ஆராய்ந்த சனாதிபதி ஆணைக்குழு கூறியிருந்தது. இந்தியாவில் பின்தங்கிய வகுப்பினருடைய மேம்பாடு கருதி அவர்களுக்கு மேலதிக உயர்கல்வி வாய்ப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட போது பல மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் தோன்றின.

நான் பேசவிருப்பது என்னவென்றால் இந்த வன்முறைகள், பலாத்கார நடவடிக்கைகள் எவ்வாறு கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்றன என்பதுதான். என்னுடைய தலைப்பின் உட்பொருளாக அமையும். கல்வியை ப்பற்றிக் கூறுவதாக இருப்பின் யாவருக்கும் கல்வி என்ற கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் தான் முன்வைக்கப்பட்டிருக்கிறது. யாவருக்கும் கல்வி யாவருக்கும் விஞ்ஞான கல்வி என்ற கருத்து 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே முன் வைக்கப்படவில்லை அண்மையில் 1990களில் தான் முன்வைக்கப்பட்டது. காலங்காலமாக கல்விமுறை எவ்வாறு இருந்து என்பது பற்றி நாம் ஆராய்ந்து இருந்தால் கல்விமுறைகள் வசதி மிக்கவர்களுக்குரியதாக செல்வாக்கு மிக்கவர்களுக்குரியதாக ஒரு பொழுது போக்குச் சாதனமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றைய நவீன கால கட்டத்திலே கல்வியின் ஒரு முக்கிய பணி என்ன வென்றால் கல்வி மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதாகும்.

– பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

தேசிய இனப்பிரச்சினை போர்க்காலத்தில் கல்வி போர்க்காலத்தில் சிறுவர் உளவியல் – எனும் புத்தகத்திலிருந்து பெறப்பட்டது.

## அப்படித்தான் செய்வார்கள்

பூக்களுக்கு
வாழ்த்துக்கள் கூறி
அதன் வேர்களுக்கு
நஞ்சூட்டினர்

தென்றலை
வரவேற்று
பின் நின்று
தீப்பிடித்தனர்

முகம் நோக்கி
புன்முறுவல்கள் காட்டி
கழுத்துக்குப் பின்
கத்திகளை நீட்டினர்
நாங்கள்
உங்கள் மனிதர்கள்
என்று சொல்லி
எங்களை விட்டு
அந்நியப்பட்டு
எதிரிகளுடன் கலந்து
அடையாளமிட
வந்தனர்

எமது யுத்தமென
உரத்துக் கூறி
துவக்குகளை
முகம் பார்க்க
வைத்துக்கொண்டனர்

ஈழகணேஷ்

நன்றி விடிவுஸி




## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை – 21

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.
2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

## கருத்தாடல் களம்

### வவுணதீவு தாக்குதல் சமாதான விரோதிகளின் செயல்

வவுணதீவில் புலிகள் மீது இடம் பெற்ற தாக்குதலானது அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஜெனீவாவில் இடம்பெற்றுள்ள போர்நிறுத்த உடன்படிக்கை குறித்த பேச்சுக்களை குழப்புகின்ற செயலாகவே உள்ளது.

விசேடமாக சமாதானத்தை விரும்பாத சில இனவாதத்தரப்புகளும், கருணா உள்ளிட்ட ஒட்டுப்படைகளும் சமாதானமான சூழலை விரும்பவில்லை என்பது வெளிப்படையானது. அவ்வாறு சமாதானம் ஏற்பட்டால் தமக்கு இருப்பு இல்லாமல் போய்விடும் என்பதே இவர்களது பயமாகும்.

எஸ்.சரவணபவானந்தன், அரியாலை

### மஹிந்த முஸ்லிம்களை ஏமாற்றியுள்ளார்.

ஜெனீவா பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்காமல் பேரியல் அஷ்ரப்பை அரச குழுவில் இடம்பெற வைத்ததன் மூலம் முஸ்லிம்களை மஹிந்த ராஜபக்ஷ ஏமாற்றியுள்ளார்.

அடுத்து இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றிலும் கூட முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்குவது தொடர்பாக எவ்வித உறுதி மொழியையும் மஹிந்த ராஜபக்ஷ வழங்கவில்லை. இதன் மூலம் அவர் முஸ்லிம்களின் விடயத்தில் அலட்சியமாக நடக்கிறார் என்றே கூற வேண்டியுள்ளது.

முகமட் ரிஷாட், காத்தான்குடி

### முஸ்லிம்களின் மீது மகிந்த அக்கறை கொண்டுள்ளார்.

கடந்த ரணில் அரசாங்க காலத்தில் இடம் பெற்ற பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனி இடம் வழங்கப்படவில்லை. அத்தோடு அப்பேச்சில் கலந்து கொண்ட ரவூப்ஹக்கீம் முஸ்லிம்கள் குறித்து வாய்திறக்கவில்லை.

எனினும், இம்முறை பேச்சில் அமைச்சர் பேரியல் முஸ்லிம்கள் குறித்து பேச முடிந்தமையானது மஹிந்த முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள அக்கறையையே எடுத்துக் காட்டுகிறது.

ஏ. முகமட் ரிஷ்வி, சம்மாந்துறை

## சமாதான நிகழ்வுகள்

### தொண்டுத்துவத்தினூடாக அபிவிருத்தியும் சமாதானமும்



சர்வதேச தொண்டர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஸ்தாபனம், தொண்டர்களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியவை ஒன்று சேர்ந்து கடந்த மார்ச் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை காலி சாந்த அலோசியஸ் கல்லூரியில் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் தொண்டார்வம், விளையாட்டினூடாக சர்வதேச அபிவிருத்தி இலக்குகளையும், சமாதானத்தையும் அடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. பல்வேறு பிரதேசங்களையும், பல்வேறு இனங்களையும் சேர்ந்த நூற்றுக்கான தொண்டர்களும் பயிலுனர் ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### உள்ளூராட்சி தேர்தலில் பெண்கள்




அரசியலில் பெண்களது பங்கெடுப்பை ஊக்கப்படுத்துவது குறித்த பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் அண்மையில் பெண்கள் ஊடக கூட்டமைப்பானது உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் பெண்கள் குறித்த ஊடக கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை கல்வி நிறுவகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பெண்கள் அமைப்புகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இவ்வார விழிப்பில்...


- சர்வகட்சிமாநாடும் அரசியல் சூழலும்
- உங்கள் குரல்
- வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம்
- ஆறு சுற்று பேச்சுக்களும் படிப்பினைகளும்
- சமாதான நிகழ்வுகள்

## வாசகர் கவனத்திற்கு...

**கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.** அத்தோடு விழிப்பின பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி vil:ippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



கலாபக காதலன
ஆர்யா ரேணுகா மேனன்

# இது ஸ்ரேயா ஸ்ரைல்!



'சிவாஜி'யைத் தொடர்ந்து தமிழ் சினிமாவில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளார் ஸ்ரேயா. அதை முன்னிட்டு, ரஜினியுடன் ஜோடியாகிவிட்டார்.

இனி இவர் நமக்கெல்லாம் எட்டாத கனி தான்! என்று ஒதுங்கிச் செல்லும் தயாரிப்பாளர்களைத் துரத்திப் பிடித்து ''பயப்படாதீர்கள்... எப்போதும் உங்கள் பட்ஜெட்டுக்குள் நான் அடங்குவேன்'' என்று தெளிவுபடுத்தி அதிக படங்களைக் கைப்பற்றும் டெக்னிக்கில் இறங்கிவிட்டார். விஷயமறிந்த அஸின், நயன்தாரா உள்ளிட்ட நடிகைகளுக்கு குளிர் ஜுரம் ஆரம்பமாகிவிட்டது.

---

நடிகை நவ்யா நாயருடன் அவருடைய அம்மா சென்றால் இது உங்கள் அக்காவா? என்று கேட்கிறார்களாம். அம்மாவின் இளமையை நினைத்து பூரித்து போகிறாராம் நவ்யா. தாய்க் குலத்துக்கு அதற்குமேல் மகிழ்ச்சி.

# 'கெட் - அப்' மாறியது



ஆர்.பி.சவுத்திரியின் மகன் நடிகர் ரமேஷ் கடந்த மாதம் அவரது தூரத்து உறவுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டர்.

திடீர் திருமணம் எதற்கு என்று கேட்டால்... ''எனக்குப் பழக்கமான பெண்தான். வீட்டில் சொன்னார்கள் சரியென்று தாலி கட்டிவிட்டேன்'' என்றார் சிரித்துக்கொண்டே

திருமணத்துக்குப்பின் ரமேஷ் அவரது 'கெட் - அப் பை' மாற்றிவிட்டார். காதில் கடுக்கன், கழுத்தில் பாசிமாலை கையில் காப்பு அணிந்து காட்சி அளிக்கிறார். சமீபத்தில் நடந்த 'மது' படப் பாடல் கேசட் வெளியீட்டு விழாவிலும் இதே கெட் - அப்புடன் வந்து இளையராஜா வெளியிட்ட கேசட்டைப் பெற்றுக் கொண்டார்.



'பட்டியல்'
ஆர்யா, பத்மபிரியா, பரத், பூஜா



'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்'
ஜெயம் ரவி – திரிஷா

# புதுமையான பாடல் காட்சி

'வேட்டையாடு விளையாடு' படத்துக்காக கமலஹாசன் - ஜோதிகா நடித்த ஒரு பாடல் காட்சியை அமெரிக்காவில் மிகப் புதுமையான பாணியில் - நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி படமாக்கி இருக்கிறார்கள்.

இந்தப் பாடல் காட்சியை மட்டும் படமாக்க 7 நாட்கள் ஆகியிருக்கிறது. படத்தில் ஒரு பாடல் மட்டுமே பாக்கியிருக்கிறது. அந்தப் பாடல் காட்சியில் மும்பை அழகி அமிர்தா அரோராவை ஆட வைக்கலாமா? என்று யோசித்து வருகிறார்கள்.

# விடிய விடிய டப்பிங் பேசிய அஜீத்


ஏவி.எம்.தயாரிக்கும் 'திருப்பதி' படத்துக்காக அஜீத்குமார் தொடர்ந்து 3 நாட்கள் இரவு 10 மணிக்கு ஆரம்பித்து அதிகாலை 5.00 மணி வரை 'டப்பிங்' பேசினார்.

படத்தைப் பார்த்த அஜீத் முகமெல்லாம் பிரகாசம். அதன் விளைவாகவே அவர் முழுமையான ஈடுபாட்டுடன் விடிய விடிய 'டப்பிங்' பேசியிருக்கிறார்.

---

நடிப்புக்காக முத்தம் கொடுப்பதில் தவறில்லை என்பதில் தேஜாஸ்ரீ உறுதியாக இருக்கிறாராம்.

# தெலுங்குப் படம் தயாரிக்கும் சேரன்




டைரக்டர் சேரன் இயக்கிய 'பொற்காலம்', 'ஆட்டோகிராப்' படங்கள் தெலுங்கில் 'ரீமேக்' செய்யப்பட்டன. அவை எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் சேரன் தயாரிப்பில் பரத் – மல்லிகா கபூர் நடித்துவரும் 'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது' என்ற படத்தை 'மகா' என்ற பெயரில் சேரன் தெலுங்கில் தயாரிக்கிறார். பொருத்தமான நடிகர், சரியான கதை, நல்ல இயக்கம், மக்கள் மனதைத் தொடும் அம்சம் இருந்தால் எந்தப் படமும் வெற்றி பெறும் என்கிறார் சேரன்.



1999:
சத்யா - கீர்த்தி சாவ்லா

# கதைக் களத்தில் மூழ்கிக் கிடக்கும் சீயான்



'அந்நியன்' ரேஞ்சுக்கு 'பீமா' வை உருவாக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் விக்ரம்.

கேரளத்துக்குச் சென்று எண்ணெய் மசாஜ் செய்து உடம்பை ட்ரிம் செய்து வந்திருப்பவர், 'பீமா' வுக்காக நிறைய 'ஹோம் ஒர்க்' செய்து வருகிறார்.

''லிங்குசாமி கோடு போட்டா நான் என் பங்குக்கு ரோடு போடணுமா இல்லியா?'' என்று சதா கதைக் களத்துக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கிறார் சீயான்.

# மும்மொழி திரைப்படம்

பாரதிராஜா மீண்டும் பழைய வேகத்துடன் படம் இயக்கப்போவதாகச் சொல்லியிருந்தார். இப்போது அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்தப் படத்தை தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் படமாக்கத் திட்டமிட்டு இருக்கிறார்.

# பொலிஸாரும், புலிகளும் மனித உரிமைகளை மீறி வருகின்றனர் -அமெரிக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸாரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மனிதவுரிமைகளை மீறி வருவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றஞ்சாட்டியுள்ளது.

2002ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் அடிக்கடி மனிதவுரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2005ஆம் ஆண்டு உலகம் மனிதவுரிமைகள் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இராஜாங்கத் திணைக்களம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மனிதவுரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுகின்ற போதிலும் பாரதூரமான மனிதவுரிமைபிரச்சினைகள்தொடர்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத் தரப்பில் யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் இடம்பெறுவதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை மேற்கோள் காட்டி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸாரின் கைது நடவடிக்கைகளின் போது 25 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# கிராமிய மட்ட அமைப்புகள் செயற்படாதிருந்து வருகின்றன

## சமூக ஆர்வலர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள கிராமிய மட்ட அமைப்புக்களாகக் கருதப்படுகின்ற சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் அவற்றின் இலக்குகளைத் தொடும்வண்ணம் செயல் படாமல் இருந்துவருவது குறித்து சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் கவலைகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

கிராமிய மட்டங்களில் கிராமிய தலைமைகளினால் வழிநடத்தப்பட்டு சமூக-பொருளாதார-சுகாதார-கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபட வேண்டிய இத்தகைய அமைப்புக்கள் இன்று செயல்பாடுகள் அற்ற நிலையிலேயே இருந்து வருகின்றன.

இத்தகைய அமைப்புக் களில் 50 சதவீதத்தினருக்கு இயங்கக் கூடிய கட்டட வசதிகள் இருக்கின்ற போதிலும் கூட, நிதியின்மை, போதிய வழிகாட்டல்இன்மை போன்ற காரணங்களினால் செயல்படாமல் இருப்பது தெரியவருகின்றது.

இவ்வாறான அமைப்புக் களை வழிநடத்தவும், ஆதரவளிக்கவுமென அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கூட போதிய ஆர்வமும் அக்கறையும் காட்டாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் வருடாவருடம் இவ் அமைப்புக்களுக்கான புனரமைப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருவது வழமையான காரியமாகியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. புனரமைப்புக் கூட்டங்களின் போது மேற்குறித்த அமைப்புக்களுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படுவதாகவும், ஆனால் அவை தொடர்ந்து இயங்காமல் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (த-16)

# நன்னீர் மீன் வளர்ப்புக்கு ரூபா 20 இலட்சம் நிதியுதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தைகிழக்கு பிரதேசத்தில் பாரிய அளவில் நன்னீர் மீன்பிடித் திட்டம் ஒன்றைநடைமுறைப்படுத்தி அதன் மூலம் பிலாப்பியன் என்ற புதிய இன மீன் வர்க்கத்தை வளர்த்து இனப்பெருக்கம் செய்வதற்கான திட்டம் ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் 20 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இத் திட்டம் வடமாகாணத்தில் முதல் தடவையாக முல்லைத் தீவு மாவட்டத்திலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந் நன்னீர் மீன் வளர்ப்பு வழமைபோல் நீர்ப்பாசனக் குளங்களில் அல்லாமல் கட்டப்பட்ட தொட்டிகளிலே குறிப்பிட்ட பிலாப்பியன் இன மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு மீனவ சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படும் குஞ்சுகள் குளங்களில் விட்டு வளர்க்கப்படும் எனவும் அவை முதிர்ச்சியடைந்ததும் குறிப்பிட்ட சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும் எனவும் இத் திட்டத்தின் நிறைவேற்று முகவராகச் செயற்படும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மரியதாசன் ஜெகூ தெரிவித்தார்.

இப் பிரதேசத்தில் முதல் தடவையாக அறிமுகமாகும் இத் திட்டம் வடமாகாணத்தில் மூன்றாவது பாரிய நீர்ப்பாசனக் குளமான வவுனிக் குளத்துக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு வவுனிக் குளத்திலே வளர்க்கப்பட்டு மீன் குஞ்சுகள் இப் பிரதேசத்தில் உள்ள ஏனைய நூற்றுக்கு மேற்பட்ட குளங்களில் விடப்பட்டு இனப் பெருக்கம் செய்யப்படும் எனத் தெரிகின்றது.

இக்குறிப்பிட்ட பிலாப்பியன் இன மீன் குஞ்சு ஒன்று ஆறு மாத முதிர்வில் சுமார் 750 கிராம் நிறை யையும், 2 வருடங்களின் பின் சுமார் 4-5கிலோ நிறையையும் அடைந்துவிடும்.

இத் திட்டமானது நிறைவேற்றப்பட்டு வளர்ச்சியடைந்து வரும் போது இப் பிரதேச மீனவர்கள் அதிக நன்மையடைவார்கள் என இத்திட்டத்தின் நிறைவேற்று முகவரான பிரதேச செயலாளர் ஜெகூ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இப் பிரதேசத்தில் வளர்க்கப்படும் நன்னீர் மீன்களான ஜப்பான், விரால், பனையேறி, கச்சல் வெட்டியன் ஆகியவை கருமை நிறம் கொண்டவை. பிலாப்பியன் இன மீன் நிறத்தில் கடல் மீனைப் போன்ற வெள்ளை நிறமாதலால் சந்தையில் அதிக கிராக்கியுள்ளது. குறிப்பாக தென் இலங்கை வர்த்தகர்கள் வன்னிப் பிரதேசத்துக்கு வந்து நன்னீர் மீன்களை கிலோ 20ரூபாவுக்கு கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

பிலாப்பியன் இன மீன் கிலோ 35 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொருத்தமான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இது விடயமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் மூலமாக பராமரிப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-128)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இம் மாதத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப10மணி யளவில் மகா மண்டபத்தில் பிரதேச செயலர் ஏ்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் உள்ளூர் திணைக் களங்களைச் சேர்ந்த அதிகாரிகளைத் தவறாது சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (த-35)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைப் பாராயணம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணி முதல் குப்பிளான் வடக்கு கற்கரை ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இவ்வாலயத்தில் நடைபெற்றுவந்த பதினோராந் திருமுறை முற்றோதல் செவ்வாய்க்கிழமை மாலை நிறைவுபெறும்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்க்கட்டு அருள்மிகு வெயிலுகந்த ஸ்ரீ விநாயகர் ஆலயத்திற்கு நால்வர்பெருமக்கள், திருமுறைச் சுவடிகள் யானை வாகனத்தில் எழுந்தருளி மறுநாள் 15 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் பன்னிரண்டாந் திருமுறை முற்றோதல் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறும். (க)

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலையின் ஆரம் பக் கல்வி புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 11.00 மணிக்கு யா/சரவணை சின்னமடு றோ.க. த. க பாடசாலையில் அதிபர் க.சண்முகம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷும், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலர் எஸ்.பாஸ்கரன், சின்னமடு தேவாலயத்தின் பங்குத்தந்தை பீற்றர் துரைரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (க-9)

## முக்கிய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை தீவக அரிமாக் கழகத்தினால் நடாத்தப்படும் நீரிழிவு கருத்தரங்கும் பரிசோதனையும் இலவச மருந்து வழங்கல் மற்றும் புதிய அங்கத்தவர்களை இணைத்தல், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல், நுளம்பு வலை வழங்கல், ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டி வழங்கல் ஆகிய முக்கிய நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணி தொடக்கம் யாழ் / சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயத் தலைவர் லயன் ரி. அன்பானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (க-9)

# இலவச பாடசாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் வர்த்தகக் கல்லூரியின் அனுசரணையுடன் கடவுளின் குழந்தைகள் (Gods own children) அமைப்பு பிறப்பிலேயே அங்கவீனமடைந்த குழந்தைகளுக்கும், வறுமை நிலை காரணமாகப் பாடசாலைக்குப் போக முடியாத நிலையில் உள்ளவர்களுக்கும் இலவச பாடசாலையொன்றை நடாத்தவுள்ளது.

இப் பாடசாலையின் திறப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நல்வேளையில் 107, ஏ.வி.றோட், அரியாலையில் திறந்து வைக்கப்படும்.

இப் பாடசாலையில் சேரும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், உடை, காலணி முதலியன இலவசமாக வழங்கப்படவுள்ளது. (து)

# 18 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 3 மாத கற்பித்தல் பயிற்சி

'அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள 18ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் துறையில் 3 மாதங்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவிருக்கிறது' என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் கிழக்கு, தெற்கு பல்கலைக் கழகங்களில் ஒவ்வொரு தவணைக்கும் 500 பட்டதாரிகள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பயிற்சியின் பின், மாகாணப் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

# முன்பள்ளி சிறார்களுக்கு மகிழ்வூட்டல் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்க நிறுவனமானது அரங்க செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு வருகின்ற ஒரு நாடக அரங்க நிறுவனமாகும்.

இந் நிறுவனம், சிறுவர் அரங்கில் நன்கு பயிற்சி பெற்ற 40 நாடக ஆற்றுகையாளர்களைக் கொண்டு கிராமங்களில் சிறுவர் கழகங்களை அமைத்து அக் கழகங்கள் ஊடாக சிறுவர் உளவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தவகையில், முன்பள்ளி சிறுவர்களின் உளமகிழ்விற்கு துணைநிற்பதான சிறுவர் அரங்க செயற்பாட்டை முன்பள்ளிகளில் நடாத்துமாறு செயல் திற அரங்க இயக்கத்திடம் பல முன்பள்ளி ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கமைவாக சிறுவர்களுக்கு மகிழ் வூட்டல் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு குறித்த இயக்கம் தீர்மானித்துள்ளது.

இவ் அரங்கினூடாக மகிழ்வூட்டல் செயற்பாட்டை தமது முன்பள்ளிகளில் செயற்படுத்த விரும்புபவர்கள் தமது நிறுவனத்தில் பதிவினை மேற்கொண்ட பின்னர் மாதத்தில் ஒருநாள் ஒரு மணிநேரம் இலவசமாக முன்பள்ளி சிறார்களின் உளவிருத்திக்கமைவான அரங்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என செயல் திறன் அரங்க இயக்க நிர்வாகம் அறிவித்துள்ளது. (க)

# தேசிய ரீதியிலான கலை இலக்கிய போட்டிகளில் வெற்றிபெற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலை

கடந்த மாதம் 12ஆம் திகதி கிரகம ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற தனி நடனம், குழு நடனம் ஆகியவற்றில் முதலாம் இடங்களை கோப்பாய் ஆசிரிய கலாசாலை தட்டிக்கொண்டது.

அதே மாதம் 18ஆம் திகதி மகரகம ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்ற நாடகப் போட்டியில் மூன்றாம் இடத்தினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை தட்டிக்கொண்டது.

அத்துடன் சிறந்த கதை இயக்கத்திற்கான விருதையும், சிறந்த இசை அமைப்புக்கான விருதையும், சிறந்த துணை நடிகைக் கான விருதையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் பெற்றுள்ளனர்.

அம் மாதம் 24 ஆம் திகதி பனிதெனிய கலாசாலையில் நடைபெற்ற தனிநிகழ்வுகளில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

*தனிநடனம்*

முதலாம் இடம்:சி.சுகிர்தா

*தனிப்பாடல்*

முதலாம் இடம்:க.வேணி, கு.கோகிலன்

இரண்டாம் இடம்: ஸ்ரீ.கிருசாந்தி

*பேச்சு*

மூன்றாம் இடம்:க.யூட்சிவாகரன்

இவைதவிர குழு நிகழ்வுகளில் கு.உதயகுமார் நாடக கதை இயக்கத்துக்கான விருதையும், ஜே.சூரியா சிறந்த இசைக்கான விருதையும், திருமதி ஜெ.ஸ்ரீதேவி துணைநடிகைக்கான விருதையும் பெற்றுள்ளனர். (க)

# சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் ஜனாதிபதி மஹிந்தவின் கையில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைத்துத் தேர்தல் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆணைப்படியே நடைமுறைப்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இதன்மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நேற்று முன்தினம் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ கட்சித் தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் முதன்முதலாக விஜயம் செய்தார்.

அவருக்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் பெரும்வரவேற்பளித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை ஜனாதிபதியிடமே ஒப்படைக்க வேண்டும் என்பதே கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பிரதான கருத்தாக அமைந்தது. அனைத்து வேட்பாளர்கள் சார்பாகவும் ஜனாதிபதியின் தலைமையில் நாடு பூராகவும் பிரசாரங்களை நடத்த கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. (து-9)



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை



71 மீள்பார்வை

நான் ஒரு படத்தை இயக்கினேன் என்றால் அதில் நடிக்கும் எல்லா நடிகர்களுடைய முகத்திலும் என்னுடைய சாயல் இருக்கிறதா? என்றுதான் பார்ப்பேன் என்னை மாதிரி நடிக்கிறார்களா? என்று தான் எதிர்பார்ப்பேன் இல்லை என்றால் விடமாட்டேன் அவர்களாகவும் நடிக்க அனுமதிக் கமாட்டேன் என்னை மாதிரி நடிக்கிற வரைக்கும பயிற்சி கொடுத்துக்கொண்டே இருப்பேன் . தொடர்ந்து டேக் எடுத்துக்கொண்டே இருப்பேன். இதனால் என்ன ஆகும் என்னுடன் நடிக்கும் எல்லோருமே சிவாஜி கணேசன் போல்தான் நடிப்பார்கள் .



ஜெய்பால் ரெட்டி ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவுடன்


ஒரே காட்சியில் எட்டு சிவாஜி கணேசன் இருந்தால் அந்தக் காட்சி நன்றாய் இருக்குமா? ஒரு படம் முழுவதும் எல்லோரும் சிவாஜி கணேசனாக் இருந்தால் ஜனங்கள் ரசிப்பார்களா? ஆகையால் தான் அந்தத் தவறான காரியத்தை நாம் செய்யக் கூடாது என்று நான் படங்கள் எதையும் இயக்க விரும்ப வில்லை. இது எனக்குப் பிடிக்காத வேலை அது ஒரு பக்கம் இருக்கட்டும் எனக்குத் தெரியாத வேலையில் நான் எப்பொழுதும் தலையிடுவதில்லை அப்படியிருந்தும் ஒரு படத்தில் என்னைத் திரைப்பட டைரக்டர் வேடத்தில் நடிக்க வைத்து விட்டார்கள் அந்தப் படம் தான் சாதனை.

ஒரு திறமையான இயக்குனர் ஒரே சமயத்தில் ஒரு படம் தான் இயக்க விரும்புவார் .அப்பொழுது ...ன் எல்லாப் பொறுப்புகளையும் சரிவரச்செய்ய முடியும் நடிகனாக இருந்தால் ஒரே சமயத்தில் மூன்று அல்லது நான்கு படங்கள் நடிக்கலாமே இதையெல்லாம் எண்ணித்தான் நான் இயக்குனராக வில்லை.

டி.எஸ்.என்: ஐம்பது வருடங்கள் சாதனை புரிந்து கிட்டத்தட்ட முந்நூறு படங்களில் நடித்துள்ளீர்கள் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இயக்குனர்கள், கதாசிரியர்கள் யார் யார்?

சிவாஜி: இதுவரை உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது பல டைரக்டர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றேன். நாம் எந்தெந்தப் படத்தை நினைவு கூர்ந்தோமோ அது சம்பந்தப்பட்ட டைரக்டர்களைப் பற்றிப் பேசியிருக்கிறோம்.

பல படங்களில் அவற்றை இயக்கிய டைரக்டரே கதை வசனமும் எழுதியிருப்பார் உதாரணமாக ஏ.பி.நாகராஜன் , கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் தவிர டைரக் டர்கள் மாதவன் , தாதா மிராசி , கே. சங்கர் போன்றவர்களும் என்னை நடிக்க வைத்து நல்ல படங்களை இயக்கி மக்கள் விரும்பிய திரைப்படங்களை தந்திருக்கிறார்கள். 300 படங்களையும் நினைவு கூர்ந்து இயக்குனர்கள் பெயரைச்சொல்வது கடினம் என்னைப்பொறுத்த வரையில் என்னை இயக்கியவர் ஒரே ஒரு படத்தில் மட்டும் எனக்கு டைரக்டாராக இருந்தாலும் அவரையும் நான் மதித்து மரியாதை செலுத்துகிறவன்.



இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா விருதை வழங்கிய போது....


கதாசிரியர் என்று எடுத்துக் கொண்டால் முதலில் ஞாபகம் வருவது அறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் தான் இவர்கள் எழுதிய தமிழைப் பல படங்களில் பேசித்தான் நான் திரைப்படங்களில் புகழ் பெற்றேன்.

ஆரூர்தாஸ் என்பவர் பாவரிசைப் படங்கள் பலவற்றிற்கு கதை வசனம் எழுதியிருக்கிறார் . கதாசிரியர் குகநாதன் தான் ராஜபார்ட் ரங்கதுரை கதையெழுதித் தயாரித்திருந்தார். இது போல எத்தனையோ கதை வசன கர்த்தாக்கள் எழுதித்தந்த இனிய தமிழைப் பேசி நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிக்கொள்கிறேன்.

### *ஏழிலிருந்து... எழுபது வரை...*

டி.எஸ்.என்: உங்களுடைய ஏழு வயதிலிருந்து இன்று வரை எண்ணற்ற நடிக நடிகையர்கள் உங்களோடு நடித்திருக்கிறார்கள். அவர்களில் மிகச் சிறப்பாக நடித்தவர்கள் சிலரைக் குறிப்பிட முடியுமா?

சிவாஜி:நான் ஒருநடிகன் எனவே , மற்றநடிகர்களைப்பற்றி விமர்சனம் செய்வது நாகரிகம் ஆகாது இவர் நன்றாக நடித்தார். என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் இவர் நன்றாக நடிக்க வில்லை என்று நான் விமர்சித்ததில்லை. நடிகர்நடிகைகளை நான் வாழ்த்தி பாராட்ட முடியுமே தவிர விமர்சனம் செய்ய முடியாது.



பால்கே விருது பெற்றதற்கு ஸ்ரீலங்காவில் நடந்த பாராட்டு விழாவில் கலைஞர்கள் , பிரமுகர்களுடன்...

ஆனால் ஏழிலிருந்து எழுபது வயதுக்குள் நான் மூன்று தலைமுறைக் கலைஞர்களைப் பார்த்திருக்கிறேன். அவர் களில் சிலரை இங்கே ஞாபகப் படுத்திக்கொள்கிறேன்.

1950-1970ல் பிரபலமாக இருந்த எம்.ஆர். ராதா , எம்.ஜி.ஆர் ,பாலையா , சந்திரபாபு , வி.கே. ஆர் . நம்பியார் , முத்துராமன் , ஜெமினி கணேசன் , மனோகர் ,தங்கவேலு , நாகேஷ் என்று நடிகர்கள் பலரைச் சொல்லலாம் நாகேஸ்வரராவ் என்.டி. ராமா ராவ் பிரேம் நசீர் போன்றவர்களுடனும் நடித்திருக் கிறேன் நடிகைகளை நினைவு கூர்ந்தால் பானுமதி ,அஞ்சலிதேவி ,சாவித்திரி ,பத்மினி , சௌகார் ஜானகி ,தேவிகா , மனோரம, ராஜம் , கே.ஆர் விஜயா , மஞ்சுளா , சுஜாதா , லட்சுமி என்று பலரைக் குறிப்பிடலாம். இவர்களோடு நடித்த படங்கள் சிலவற்றைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். 1970-1990 ல் புகழடைந்து வந்த அடுத்த தலைமுறையில் சிவகுமார் ,கமலஹாசன் , ரஜினிகாந்த் , விஜயகாந்த் , சத்யராஜ் , பாக்கியராஜ் , விஜயகுமார் ,கார்த்திக் ,பிரபு , மகேந்திரன் , அர்ஜுன் , சரத்குமார் போன்ற நடிகர்களையும் ஸ்ரீதேவி , ஸ்ரீப்ரியா , ராதிகா ,ரேவதி ,ராதா , நதியா போன்ற நடிகைகளையும் சொல்லலாம் இவர்களில் பலர் என்னுடன் நடித்திருக்கிறார்கள். அடுத்த படியாக திரைப்படத் துறையில் 1990க்கு மேல் ஒரு புதிய தலைமுறை உருவாகி இருக்கிறது. (தொடரும்)



# தவக்கால சிந்தனை

## உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்

மலை உச்சியை நோக்கிய இரு பயணங்கள் இரண்டுமே இறைவனோடு ஆழமான உறவு கொள்வதற்காக இரண்டுமே செப அனுபவத் திருப்பயணங்கள். இந்த அனுபவங்களின் வெளிப்பாடு மகிமை, வளமை, அன்பின் நிறைவு ஒரே மகனையும் கடவுளின் விருப்பத்திற்காக பலியிடத் தயாராகும் ஆபிரகாமின் விசுவாசம் மலைமேல் குன்றின் மேல் இட்ட தீபமாக எரிந்து ஒளிர்கிறது. விசுவாசத்தின் தந்தையாக அவரை உயர்த்தியது தன் தந்தையின் விருப்பத்திற்காக தன்னையே பலியாக்கத் தயாராகும் புதிய ஏற்பாட்டின் ஈசாக்கு ஆகிய இயேசுவின் விசுவாச உறவு அவரை மீட்பின் ஒளியாக ஒளிபரப்புகிறது. கடவுளின் விருப்பத்தை தேர்ந்து தெளிய திருத் தூதர்களுக்கு மட்டுமல்ல நல்லெண்ணத்துடன் இயேசுவின் மீது கண் பதிக்கும் அத்தனை பேருக்கும் இயேசு கலங்கரை விளக்கமாகிறார். தவக்காலத்தில் பயணம் செய்யும் நாம் மகிமையின் ஒளியை அனுபவிக்க இயேசுவின் ஆபிரகாமின் விசுவாச அனுபவங்களுடன் நம் வாழ்வின் அனுபவங்களை இணைத்துக் கொள்வோம்.

காவலன்

# சோதிடர் ஆலோசனையின் படி நேரத்தை மாற்றினார் மஹிந்த!

(கொழும்பு)

இலங்கை நேரத்தை சோதிடர்களின் ஆலோசனைப்படியே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளமாற்றியமைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் மகரகம சோதிடர் விமல் வீர ரட்ண கருத்துத் தெரிவிக்கையில்,

சூரியனை அடிப்படையாகக் கொண்டே நேரத்தை நாம் கணக்கிடுகிறோம் சூரியனே நேரத்தை கட்டுப்படுத்துகிற சக்தி கடந்த ஒரு தசாப்தகாலமாக இந்த இயற்கையை புறந்தள்ளி விட்டு நாம் இயங்கினோம்.

அதனால் தான் இந்தநாடுபாரிய அழிவைச் சந்திக்க நேர்ந்தது. மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சியால் அவருக்கு இலாப பலன்கள் கிடைக்கும் என்றார்.

மேலும் தனது சோதிடர்களின் ஆலோசனைக்கமையவே மஹிந்த ராஜபக்ஷ இலங்கை நேரத்தை மாற்றியமைத்ததாகவும் கூறப்படுகிறது. எதிர் வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் நேரம் 30 நிமிடத்திற்கு பின் தள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# யாழ். குடா நாட்டில் 50 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

(கொழும்பு)

அரசபடையினராலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் வடக்கு-கிழக்கின் 640 கிராமங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 10 இலட்சம் மிதிவெடிகளில் 50 வீதமானவை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எம்.எஸ்.ஜயசிங்க கூறியதாவது,

50வீதமான கண்ணிவெடிகள் யாழ். மாவட்டத்திலேயே இருந்தாகத் தெரிவித்த அவர் இந்த கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளை வெளிநாடுகளைச்சேர்ந்த 11 கண்ணி வெடியகற்றும் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆண்டு இறுதியினுள் அதி உயர் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிடும். இந்த நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முக்கிய இடத்தை வகிப்பது ஜப்பானாகும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உதவியும் கிடைக்கிறது என்றார். (க)

## உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு

# விளையாட்டு உத்தியோகத்தர் நியமனம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களின் வேலை வாய்ப்பினை 2006 ஆம் ஆண்டில் எந்த அடிப்படையில் வழங்குவது என்பது தொடர்பாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரா.தியாகலிங்கம், ஆசிரியர்சங்கத்தின்பொதுச்செயலாளர் த.மகாசிவம்மற்றும் சங்கத் தலைவர் இராஜநாயகம், யாழ்.மாவட்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம், துணைச்செயலாளர் நாகேந்திரராஜா, உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் உட்பட பல அதிகாரிகளை சந்தித் துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பானது திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் உடற்கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களை ஆசிரிய நியமனத்தில் உள்வாங்குவது தொடர் பாக கல்வி அமைச்சுடன் பேசி பட்டதாரிகளை உள்வாங்கும் போது டிப்ளோமா பட்டம் பெற்றவர்களையும் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்றும், வடக்கு-கிழக்கில் விளையாட்டு உத்தியோகத்தருக்கான வெற்றிடம் அதிகமா கக் காணப்படுகின்றதால் இதனை நிரப்பும் போது டிப்ளோமாபட்டம் பெற்றவர்களையும் நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர் இரா. தியாகலிங்கம் தெரிவித்தார்.

வேறு துறையில் உள்ளவரையோ அல்லது பட்ட தாரிகளையோ விளையாட்டு உத்தியோகத்தராக நியமிக்கும் போது அவர்கள் இடையில் விலகிச்செல்கின்றமையினால் தொடர்ந்தும் வெற்றிடம் ஏற்பட்டுவிளையாட்டு நிர்வாக நட வடிக்கைகளும் பாதிப் படைகின்றது எனச் சுட்டிக்காட்டிய தியாகலிங்கம், இத் துறைசார்ந்தவர்களை நியமிக்கும் போது உணர்வுடனும் ஒற்றுமையுடனும் செயற்படுவார்கள் என்றார்.

மேலும் இந்த நியமனத்திற்கான வர்த்தமானி வெளியிடும் போது தேசிய மட்ட சான்றிதழுடன் , டிப் ளோமா சான்றி தழ் உள்ளவர்களுமே விளை யாட்டு உத் தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் இரா. தியாகலிங் கம் சங்கத் தலைவருக்கு உறுதியளித்தார். (க-132,133)

## சிறு விளம்பரம்

கன்னாதிட்டி சந்திக்கருகில் கஸ்தூரியார் வீதி, 301 ஆம் இலக்க கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கி வந்த மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா, எலக்ரோனிக் பொருட்கள் திருத்துதல் ஆகிய வேலைகளைச் செய்துவரும் **ரகு போட்டோ டெக் நிறுவனம்** இப்பொழுது தனது வேலைகளை ஆரம்பித்துள்ளது.

எனினும் இந்நிறுவனம் இந்த மாதம் 13ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*சு.நாராயணசாமி*
*9.3.2006* *ரகு போட்டோ டெக்*
*185*

=================

கொடிகாமம் சந்தை உட்பகுதியில் புறொயிலர் கோழி இறைச்சி விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இங்கு புறொயிலர் கோழி இறைச்சி வேண்டிய நிறைகளில் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

*c-260*

# போரினால் பாதிப்புற்றோருக்கு உதவ அரசு பின்னடிப்பதேன்?

## மனிதநேய அமைப்புக்களின் தலைவர் சு.பரமநாதன்

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட கடந்த நான்கு வருட காலத்தில் எமது பிரதேசத்தில் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. இதனால் மக்கள் சொல்லொணா துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர். நீதிகூட எமக்கில்லாத நிலைதான் காணப்படுகின்றது என யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் தலைவர் சு.பரமநாதன் இணையத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இணையத் தலைவர் பொ.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் சு.பரமநாதன் தொடர்ந்து உரையாற்றும்போது,

எமது மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவிகள் சமநிலையாகப் பகிர்ந்து வழங்கப்படவேண்டும்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வரும் அரசு போரினால் பாதிக்கப்பட்டவர்களை புறக்கணிப்பது ஏன்? அவர்களுக்கு பெரிய அளவிலான உதவிகள் எதுவும் அரசினாலும் வழங்கப்படவில்லை. பொது அமைப்புக்களாலும் வழங்கப்படவில்லை.

வலிகாமம் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் மீளவும் அங்கு சென்று குடியமரச் செய்ய அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, பலாலிப் பகுதியில் சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி எமது வளமான நிலங்களில் மரக்கறி உற்பத்தியைப் படையினர் செய்விக்க ஏற்பாடு செய்கின்றனர்.

ஆனால் எமது விவசாயிகள் அங்கு செல்லவோ, மரக்கறி உற்பத்தியில் ஈடுபடவோ அனுமதி வழங்கப்படவில்லை. வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களை அங்கு மீளவும் குடியமரச் செய்வதன் மூலம் எமது பிரதேசத்தின் பொருளாதாரம் துரித வளர்ச்சி அடையும்.

இவைதவிர, இன்று பிரதேசத்தில் திட்டமிடப்படாத செய்கைகளின் காரணமாக நன்னீர் பாதிக்கப்பட்டுவிட்டது.

எனவே நாம் எல்லோரும் இணைந்து போரினால் பாதிப்புற்ற மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். (க-16)

# உரித்தாளர்கள்இல்லாத அரச காணி உரிமத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை

நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கடந்த 1960ஆம் ஆண்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் - மத்திய வகுப்புத் திட்டமூலம் வசதி படைத்தவர்களுக்கு 20 ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டது.

இக்காணிகள் பெரும்பாலும் தென்னை, மரமுந்திரிகை போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்காகவே வழங்கப்பட்டன.

தென்னை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட காணிகள் பெரும்பாலும் அபிவிருத்தி செய்யப்பட்டு அத்திட்டம் வெற்றியளித்துள்ள நிலையில் ஏனைய தேவைகளுக்கென வழங்கப்பட்டவை உண்மையில் அந்த நிலைய அடையவில்லை.

வசதி படைத்தவர்களுக்குக் காணி வழங்கல் என்ற இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மாந்தை கிழக்கு பிரதேசத்திலும் வசதி படைத்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும், உயர் அரசாங்க அதிகாரிகளுக்கும் 20 ஏக்கர் வீதம் சுமார் ஆயிரம் ஏக்கர் வரையிலான காணி துணுக்காய் - மாங்குளம் வீதியில் ஒட்டறுத்தகுளம் என்னும் கிராமத்தில் வழங்கப்பட்டிருந்தது.

இவற்றில் பெரும்பாலான காணிகள் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத நிலையில் அநாதரவாகவே உள்ளன. குறிப்பிடக்கூடிய சில காணிகள் நாட்டு நிலைமை காரணமாக கடந்த 10 வருடங்களாக செய்கை பண்ணப்படாது எந்தவொரு அபிவிருத்தியும் இன்றித் தரிசு நிலங்களாகவே காட்சியளிக்கின்றது.

இக்காணிகளை இனங்கண்டு அபிவிருத்தி செய்யப்படாதவைகளையும் உரித்தாளர்கள் எவரும் இன்றி பல வருடமாக அநாதரவாகக் கிடக்கும் காணிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் உரித்தாளர்களை அழைத்துக் கலந்துரையாட அக்காணிகளின் உரித்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுமெனவும் பிரதேச செயலாளரும் உதவிக் காணி ஆணையாளருமான மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார்.

இதன் அடுத்தகட்டமாக உரித்தாளர்கள் எவரும் இல்லாத காணிகள் அனைத்தினதும் உரிமத்தை இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து-128)

## அபி. சங்க பொதுக்கூட்டங்களை மாத முடிவிற்குள் நடத்துக!

(மருதங்கேணி)

வடமராட்சியிலுள்ள பாடசாலைகளில் அபி விருத்திச் சங்கப் பொதுக்கூட்டங்களை இம்மாத முடிவிற்குள் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். அண்மையில் நடைபெற்ற பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்திலேயே பணிப்பாளர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார். (து-35)

## அபிவிருத்தித் திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் இவ்வாண்டுக்கான பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வீதிகள் திருத்தல், விதவைகளுக்கு சுயதொழில் வேலைத்திட்டம் ஆகியன இதில் அடங்கும் எனவும் திட்டமிடல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-72)

## நோர்வேயில் இருந்து கொண்டுவரப்பட்ட

# லேசர் நைட் விசன் கருவியால் படையினர் பெரும் குழப்பம்!

நோர்வேயிலிருந்து வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களில் ஒருவரான தர்மசேகரன் என்பவரின் பயணப் பொதியில் இருந்த லேசர் நைட் விசன் கருவியானது இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் கூட இல்லாதது என்று பாதுகாப்புத் தரப்பு அதிகாரி ஒருவர் கூறியதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தர்மசேகரனின் பயணப் பொதியில் இந்த நவீன உபகரணங்கள் 40 இருந்துள்ளன.

இந்த உபகரணங்களை நோர்வேயிலிருக்கும் ஒரு ஆயுத முகவரிடமிருந்து பெற்றிருப்பதாக ஒஸ்லோ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுங்கப் பிரிவிலிருந்து வெளியே எடுப்பதற்கு விமான நிலைய நிறைவேற்று அதிகாரி ஒருவர் சுங்கப் பிரிவினருக்கு அழுத்தங்களைக் கொடுத்தபோதிலும் அவரின் உத்தரவு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சின் அனுமதியின்றி இந்த யுத்த உபகரணங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதால் இது நாட்டின் சட்டத்தை மீறும் செயல் என்று சுங்கப் பிரிவினர் அவருக்கு எடுத்துக்கூறியதாக சுங்கப்பிரிவு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு இந்த நைட் விசன் உபகரணங்கள் கிடைத்தமை தொடர்பில் இதுவரை எவ்வித விசாரணைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## யாழ்ப்பாணத்தில்

# புதிய இனத் திராட்சை அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் புதிய இன திராட்சைகளை அறிமுகம் செய்யவுள்ளதாக யாழ்ப்பாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'காடினல்', 'எம்.மஸ்கட்' ஆகிய இரு திராட்சை இனங்களே புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பொழுது யாழ்.குடாநாட்டில் 83 ஹெக்டயர் நிலப்பரப்பில் இஸ்ரேல் ப்ளு எனப்படும் திராட்சை இனமே பயிரிடப்பட்டு வருகிறது. இவ்வினத்திராட்சைகள் மிகவும் நெருக்கமான பழங்களைக் கொண்ட குலைகளைத் தருவதால் உருவத்தில் சிறிய பழங்களே கிடைக்கின்றன.

எனவே ஐதான பழங்களைக் கொண்ட குலைகளைத் தரக்கூடிய மேற்படி இரண்டு புதிய இனங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம் என விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்மூலம் உள்நாட்டுச் சந்தையில் போட்டியிட முடியுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (து)

## சிறுவர் பூங்கா அமைப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அருகாமையில் பல இலட்ச ரூபாய் செலவில் சிறுவர் பாதுகாப்பு பராமரிப்பு நிறுவனத்தின் நிதியுதவியில் நவீன முறையில் விளையாட்டு அரங்கு, சிறுவர் பூங்கா ஆகியன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (த-72)

# குறைகேள் அரங்கு

## யாழ்.மின்சார சபை ஊழியர் குமுறல்

வடக்கில் பணிபுரிகின்ற சிற்றூழியர்களின் பதவி உயர்வுகள் தடுக்கப்படுகின்றன. பல வருடங்களாக அடிமட்டத்தில் இருந்து குறிப்பிட்ட சில வருடங்களின் பின் தரமுயர்வுகள் தரப்படும் என எதிர்பார்த்து ஏமாந்து கொண்டே இருக்கின்றோம். ஆனால் வடக்கை தவிர்ந்த மற்ற பிரதேசங்களில் உள்ளவர்கள் பதவி உயர்வு கிடைத்து சம்பள உயர்வினையும் பெற்றுக்கொண்டே உள்ளனர். தரமுயர்வுக்கான விண்ணப்பங்கள் அகில இலங்கை ரீதியில்தான் கோரப்படுகின்றன. பரீட்சைகள் நேர்முகமாகவும் செயல்முறையாகவும் இடம்பெற்றே பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த பல வருடங்களாக வடக்கு ஊழியர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஒருபுறம் போர்ச்சூழல், மறுபுறம் மேலதி காரிகளின் அசமந்தப் போக்கு. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி கிடைத்த சந்தர்ப்பங்களையும் தடுத்துவிட்டனர். ஆனால் மாற்று நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லி ஏமாற்றியும் வருகின்றார்கள். மேலதிகாரிகள் தங்கள் நிலைகளை தக்கவைத்துக் கொண்டும் ஸ்திரப்படுத்திக் கொண்டும் இருந்து கொண்டு கீழ்மட்ட ஊழியர் விடயத்தில் ஏனோ தானோ என்று செயற்படுகின்றனர்.

2002இல் ஓரளவு சமாதானம் வந்தும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி ஊழியர்களைக் கொழும்புக்கு செல்லவிடாது தடுத்து (நாமாக முன்வந்தும் கூட) யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் பரீட்சைக்கு வசதி செய்வதாகக் கூறி உறுதிமொழிகளையும் உத்தரவாதங்களையும் கொடுத்தும் கூட இதுவரை ஒன்றுமே நடைபெறவில்லை.

இதேவேளை, மற்ற பிரதேச ஊழியர்கள் தரமுயர்வு பெற்றதோடு மாத்திரமல்ல சம்பள உயர்ச்சிகளும் பெற்றுவிட்டார்கள்.

மேலதிகாரிகள் கொழும்புக்கு நல்ல அதிகாரிகளாக காட்டிக்கொண்டு தாம் நல்ல பெயர் எடுப்பதற்காக உண்மையிலேயே களத்தில் நின்று பாடுபடுகின்றவர்களின் எதிர்கால நன்மைகட்கு குந்தகம் விளைவிப்பதேன்? ஊழியர்கள் புரிகின்ற வேலையைப் பொறுத்து பெரியவர்கள் நல்ல பெயர் எடுப்பது ஒருவிதம். ஆனால் ஊழியர்களின் நலனில் அக்கறை காட்டாது மழுங்கடிப்பதன் மூலமும் நல்ல பெயரை வாங்க முற்படுகின்றார்கள்.

நன்றாகவே உழைக்கும் ஊழியர்களை விரக்தியின் விளிம்புக்கு தள்ளுவதால் என்ன நன்மை வந்துவிடப்போகிறது.

மன உளைச்சல், மனத்தாங்கல், மனவருத்தம், விரக்தி, வெறுப்பு ஏற்படுவதால் வெறும் ஜடமாகி வேலையில் சிரத்தையின்றி அக்கறையின்றி நாம் ஏன் கஷ்டப்பட்டு உழைப்பான் என்ற எண்ணப்பாங்கை மேலதிகாரிகள் உருவாக்குவது எவ்வகையில் பொருந்தும்.

மேல் மட்ட உத்தியோகத்தர்கள் கீழ்மட்ட ஊழியர்களின் நலனில் அக்கறை காட்டுவார்களா? அதன்மூலம் அவர்களையும் திருப்திப்படுத்தி சந்தோஷப்படுத்தி நிறைவான சேவையை அவர்களிடமிருந்து பெறுவதன் மூலம் சபைக்கும் முழுமையான பலாபலனைப் பெற்றுக்கொடுக்கலாமல்லவா?

நேரகாலத்தோடு அவர்கட்குரிய தரமுயர்வுகள் கொடுக்கப்படாவிட்டால் வருடங்கள் செல்லச் செல்ல வயதும் கூடிக் கூடி செயல்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதும் ஒரு பிரச்சினை, அத்தோடு போட்டியாளர்களும் கூடிவிடுவார்கள்.

தரமுயர்வும் அரிதாகிவிடும். சேவைக் காலம் முழுவதும் கடை ஊழியனாகவே இருந்துவிட வேண்டியதுதானா?

**பாதிக்கப்பட்ட ஊழியர்கள்.**

பிறர் நலத்திற்காக பாடுபடுவதுபோல் நடிக்கா தீர்கள். உண்மையிலேயே பிறர் நலத்திற்குப் பாடுபடுங்கள். பிறர் நலத்திற்குச் செய்யும் தொண்டு பிறவிப் பயன் தரும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி

# அமெரிக்காவின் கபடம் மீண்டுமொருமுறை வெளிப்பட்டது

உலகம் முழுவதற்கும் பொலிஸ்காரனாக தன்னைக் கருதிக் கொள்ளும், அமெரிக்கா, ஐ.நா.சபையை தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருப்பதில் என்றும் கண்ணும் கருத்துமாக வுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் பெருந்துயரம் மீண்டும் ஒரு தடவை நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்டதே ஐ.நா. சபையாகும்.

உலகின் மானிட வர்க்கம் இன, மத, மொழி, நிற வேறுபாடுகளால் முட்டிமோதிக் கொள்வதைத் தவிர்த்து 'மனிதம்' என்ற உயரிய பதத்தின் உரிமைகளை உறுதிப் படுத்துவது ஐ.நா.சபையின் இலக்காகும்.

உயர்ந்த நோக்குடன் உலக சமூகத்தால் உருவாக்கப்பட்ட ஐ.நா.சபை தற்போது அமெரிக்காவின் பிடிக்குள் சிக்கியிருப்பது பெரும் வேதனைக்குரியது.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஐ.நா. சபை எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும், அந்த எதிர்ப்பை இம்மியும் கருத்தில் கொள்ளாது ஈராக் மீது அமெரிக்கா அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியது.

இதன் காரணமாக அந்நாட்டின் பொருளாதாரம் நாசமாகியது. மனித உயிர்கள் அழிக்கப்பட்டன.

இன்றுவரை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. அமெரிக்க இராணுவம் ஈராக்கில் செய்து வரும் மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள் அனைத்தும் இருட்டறையில் நடந்து முடிகின்றன.

சதாம் என்ற தனி மனிதன் மீது அமெரிக்காவுக்கு இருக்கக் கூடிய ஆத்திரம் அந்த நாட்டையே குட்டிச்சுவராக்கியது.

எனினும் இதுபற்றி அமெரிக்காவிடம் கேள்வி கேட்கும் திராணி ஐ.நா.சபையிடம் இல்லை என்ற உண்மையையும் உலகம் உணர்ந்துள்ளது.

ஐ.நா.சபையின் செயலாச்கத்தை தனது பிடிக்குள் வைத்துள்ள அமெரிக்கா, ஐ.நா. சபை செயலாளராக ஆசிய நாட்டொருவரை தெரிவு செய்வதற்கு ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டாது.

அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் ஜயந்த தனபாலவை ஐ.நா.செயலாளராக ஆக்கி விடலாம் என்ற இலங்கையின் விருப்பத்தை அமெரிக்கா அடியோடு வெட்டிவிட்டது.

ஆக, அமெரிக்கா விரும்புகின்ற-தனது கட்டமைப்புக்கு ஆடக்கூடிய ஒருவரைத் தவிர வேறு யாருமே ஐ.நா.செயலாளராக வர முடியாது என்பதே உண்மை.

# படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கமா? விடுதலைப் புலிகளா?

## வினா எழுப்புகிறது ஜே.வி.பி



(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கமா? அல்லது புலிகள் இயக்கமா? பாதுகாப்புப் படையினர் புலிகள் இயக்கத்தில் தங்கியிருக்கின்றனரா? இவ்வாறு ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டீ.லால்காந்த கேள்வி எழுப்பினார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது,

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் இறுதியில் இரு தரப்பினரும் இணைந்து கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டனர்.

மேற்படி கூட்டறிக்கையில் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தமாட்டார்கள் என புலிகள் உடன்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக அரச பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புலிகள் இவ்வாறு உடன்பட்டமை யானது அரசாங்கத்துக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் அரச பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதுடன் இது குறித்து பெரு மிதம் அடையும் வகையில் பத்திரிகைகளுக்கு பேட்டிகளை யும் வழங்கி வருகின்றனர். இவர்களின் கூற்றுப்படி இராணுவத்தினரது பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது புலிகளா? என எண்ணவேண்டியுள்ளது.

இதனால் தான் இராணுவத்தினர் உட்பட பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது புலிகளா? என வினவ விரும்புகின்றோம். இதன் அடிப்படையில் கூட்டறிக்கை குறித்து எவ்வாறு திருப்தி அடைய முடியும்? இதனைநாம் எதிர்க்கின்றோம் என்றார். (க)

# நிவாரணக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளியிட வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் நிவாரணக் கலாசாரத்துக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். காலம் காலமாக நிவாரணத்தில் குடும்பங்கள் தங்கிவாழ்கின்ற நிலைமையை உருவாக்காமல் மக்களைச் சொந்தக்காலில் நிற்கத் தக்கதான ஒரு சமுதாயத்தை அமைக்க நாம் எல்லோரும் இணைந்து பாடுபடவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் கடந்த வியாழனன்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற 15 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இணையத்தின் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் கே. கணேஸ் தொடர்ந்து உரையாற்றும் போது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களுடைய கஸ்டங்களையும் ,துன்பங்களையும், அவலங்களையும் நாம் யாவரும் புரிந்துகொண்டு அவர்களின் கஷ்டங்களைப் போக்கும் பணியில் ஈடுபடல்வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னமும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான தேவைகள் என்ன என்பதைத் தெரியாமலும் புரியாமலும் நிறுவனங்கள் தம் இஷ்டம் போல உதவி வழங்கி வருகின்றன. இது எந்தளவுக்குப் பொருத்தமானது என்பது குறித்து நாம் ஆராய வேண்டும்.

இந்தவகையில் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வெளிநாட்டு நிறுவனங்களின் சில உயரிய திட்டங்களுடன் வந்து மக்களுக்குப் பெரிய அளவில் எதையுமே செய்யாது திரும்பிச் செல்கின்ற நிலைதான் இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் யதார்த்தமாகவுள்ளது.

யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னமும் கொட்டில் வீடுகளில் தான் தங்கியுள்ளன. இத்தகைய அவலநிலையை யாரிடம் எடுத்துச் சொல்லலாம் அரச சார்பற்ற நிறுவனங்களினால் செயல்படுத்தப்படுகின்ற செயல்திட்டங்களின் வேகம் போதாமல் இருக்கின்றமையைப் பார்க்க முடிகின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவுள்ள போதிலும் கூட இது வரை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் 275 வீடுகள் மட்டுமே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கஸ்டங்களைப் போக்குவதை தார்மீகக் கடமையாகக் கருதி நாம் எல்லோரும் செயல்படவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லதொரு நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு நான் செயல்பட்டு வருகின்றேன். இங்கு செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டங்களும் எமது சொந்தத் திட்டமெனக் கருதி நாம் செயல்படவேண்டும்.

நிறுவனங்களை நிர்வகிக்கின்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தம் முன் உள்ள குடும்பங்களின் உண்மையான தேவைகளை அவர்களுடன் இணைந்து அறிந்துகொண்டு செயல்படவேண்டும்.

இங்கு சமூக வலுவூட்டல் திட்டங்களைச் சில நிறுவனங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் சமூகமோ வலுவடையவில்லை. மக்களின் எண்ணங்கள் சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பது வேதனைக்குரியதாகவுள்ளது.

நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து மனத் தூய்மையுடனும் திருப்தியுடனும் செயல்படுவதன் மூலம் தான் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் அவலங்களையும் இல்லாமல் செய்யமுடியும்.

எங்களுடைய பணியின் தாக்கம் மக்களுக்கு தெரிய வேண்டும் மக்களுக்கு அன்புடனும் இதய சுத்தியுடனும் சேவை செய்யவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொலைநோக்குத் தரிசனம் கொண்டவைகளாகவும் கணக்கு வழக்குகளில் ஒளிவு மறைவின்றியும் சொல்லக் கூடியவைகளாகவும் இருத்தல் மிக அவசியமாகும்.

இந்த வகையில் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற இணையமும் அதன் அங்கத்துவ நிறுவனங்களும் காத்திரமான பணிகளை மக்களுக்குச் செய்து வருவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன் எனக்குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ,வீ.ஸ்ரீசக்திவேல், பேராசிரியர் வி.பி.சிவநாதன், திருமதி என் ஜெகதீசன், வீ.ஜீ.தங்கவேல் , எஸ்.கதிர்காமத்தம்பி, எஸ்.பரமநாதன் உட்பட வேறும் பலர் உரையாற்றினர். (து-16)

# தென் அமெரிக்கா-ஆபிரிக்கா இடையே அத்திலாந்திக் கடலில் நில நடுக்கம்

உலகின் எங்காவது ஒரு மூலையில் தினமும் நில நடுக்கம்அல்லது லேசான நில அதிர்வுகள் இருந்து கொண்டே இருக்கிறது.

நிலப்பகுதியில் ஏற்படும் நிலநடுக்கத்தை நம்மால் நேரடியாக உணரமுடிகிறது. கடலில் ஏற்படும் நில நடுக்கத்தால் சுனாமி மற்றும் கடல் கொந்தளிப்பு போன்றவை ஏற்படுகிறது.

கடந்த சில வருடங்களாக இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுவருகிறது. 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தோனேசியா அருகே நடுக்கடலில் ஏற்பட்ட நில நடுக்கம் சுனாமிப் பேரலைகளை உருவாக்கி பெரும் உயிர் சேதத்தை ஏற்படுத்தியது. அதன்பிறகு தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது.

இதேபோல் அத்திலாந்திக் பெருங்கடலில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.25 மணிக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.0 ஆக இருந்தது.

தென் அமெரிக்காவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிலநடுக்கம் மையம் கொண்டு இருந்தது.

இதனால் அத்திலாந்திக் கடல் பகுதியில் அலைகள் பல மீற்றர்களுக்கு உயர்ந்து கொந்தளிப்புடன் காணப்பட்டது. நிலநடுக்கம் வோஷிங்டனில் உள்ள புவியியல் ஆய்வு மையத்தில் பதிவாகியது சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. ஆனாலும் கடல் ஆய்வு நிபுணர்கள் அத்திலாந்திக் கடல் பகுதியை கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள். (க)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



மனிதன் காற்றை மட்டும் சுவாசித்து வாழ்வதில்லை. மாறாக உன்னதமான லட்சியங்களினாலும் நல்ல நம்பிக்கைகளினாலும் வாழ்கிறான். இறைவனை நினைப்பதே வாழ்வின் ஊதியம் என்று நல்லவர்கள் நமக்கு அறிவுறுத்துகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# வடக்கின் மாபெரும் போர் சமநிலையில் முடிபடைந்தது

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே கடந்த மூன்று தினங்கள் நடைபெற்ற நூறாவது துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிபில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 6விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த துடுப்பாட்ட வீரர்களான நிரூபன், சஞ்சீவன் ஆகிய இருவரினதும் சிறப்பான இணைப்பாட்டத்தினால் 8 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திய சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்.மத்திய கல்லூரியணியை 2-வது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட அழைத்தது.

முதல் இனிங்ஸில் தி.நிரூபன் 97 ஓட்டங்களையும் ஞா.சஞ்சீவன் 84 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக ஜெ.வியாசன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் டோ.சுதர்சன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாது இனிங்ஸில் யாழ். மத்திய கல்லூரியணி ஆடிக் கொண்டிருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் 7 ஓவர்கள் முன்னதாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அதன் போது மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. இதன் காரணமாக போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் கி.ஜோன்சன், பா.டயான் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 47,35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக கி.நிரூபன் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப் போட்டியில் முதலாவது இனிங்ஸில் யாழ்.மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தத் துடுப்பாட்டப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக 84 ஓட்டங்களைப் பெற்ற ஞா.சஞ்சீவனும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.மத்திய கல்லூரி சார்பாக 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய டோ. சுதர்சனும் சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ப.சஜீந்தனும் சிறந்த சகல துறை வீரராகவும் போட்டியின் நாயகனாகவும் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக 97 ஓட்டங்களையும் இரு இனிங்ஸிலும் 8 விக்கெட்டுக்களை கைப்பற்றிய தி.நிரூபனும் தெரிவானார்கள். (ச-5)

## கதிர்காமர்...

சிவரஞ்சன் மே மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தின்முன் முன்னிலையாக வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

மற்றைய சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிபதி உத்தரவிட்டார். (ச-5)

# பொன் அணிகள் மோதலும் சமநிலையில் முடிபடைந்தது

பொன் அணிகள் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 89 துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிபுற்றது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிபில் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் இருந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியணி ஆட்டத்தின் இறுதி நேரத்தில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஏ.ஜேந்திரன் 98 ஓட்டங்களையும் டபிள்யு.ஐ. ஜக்ஷன் 59 மற்றும் ஜெ.லூட்சன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பாக ஏ.அமலதீசன் 2 விக்கெட்டுக்களையும் என்.ஜனார்த்தனன், ஜெ.செந்தூரன், எஸ்.நிரோஷன், ஜெ.நிகேதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரியணி ஆட்ட நேர முடிபில் 8 விக்கெட்டுக்களையிழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது.நேற்றைய ஆட்டம் மழை காரணமாக 40 நிமிடங்கள் முன்னதாக நிறுத்தப்பட்டது.

துடுப்பாட்டத்தில் வி.ஜோயல் செகான் 16, சசிதரன் 10 ஓட்டங் களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் ஜெ.எவ். கொலின் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.ரெக்னோ, ஏ.மரின்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப் போட்டியில் போட்டி நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் புனித பத்திரிசியார் கல்லூரியணி சார்பாக 98 ஓட்டங்களைப் பெற்ற ஏ.ஜேந்திரனும் சிறந்த பந்து வீச்சாளராக புனித பத்திரிசியார் கல்லூரியணி சார்பாக 2 இனிங்ஸிலும் 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஜே.எவ்.கொனினும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் விக்கெட் காப்பாளர் மயூரனும் சிறந்த சகலதுறை வீரராக ஜக்ஷனும் தெரிவானார்கள். (ச- 5)

## உயர் பாது...

விடுதலைப்புலிகளுக்கு இடம் கிடைக்கலாம் என்றும் பாது காப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதையடுத்து இந்த அதியுயர் பாதுகாப்பு வலயங்களினால் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களை வேறொரு இடத்தில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே தொடங்கி விட்டது என்றும் இதற்காக கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக் கலாம் என்றும் அரச தரப்பு முடிபு செய்துள்ளதெனக் கூறப்பட்டது. (ச-4)




## வீதிக் கண்...

பதிகாரி தெரிவித்தார்.

நேற்றுக் காலை 11 மணிக்கு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

நடை முறையில் உள்ள போக்குவரத்து விதி களுக்கேற்ப தாம் செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் இரு வரும் தலைக் கவசம் அணிய வேண்டும்.

*சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட வாகன அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் பெற்றி ருக்கவேண் டும்.


*யாழ்.நகரப் பகுதியில் காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, பழைய தபால் நிலைய வீதி என்பன ஒரு வழிப் பாதையாகக் காணப்படுகின்றது. எனவே அவற்றை மீறுவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

*பரவலாக சைக்கிளில் செல்பவர்கள் மீது நடவடிக்கை.

*ஸ்ரான்லி வீதியில் வாகனங்கள் தரிப்பதற்கு ஒழுங்கு முறைப்படி அறிவித்தல் குறியீடுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்ற வேண்டும் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ச-132)




# தோழர் புஸ்பராஜாவிற்கு அஞ்சலி



சிதம்பரி புஸ்பராஜா

மயிலிட்டி

மண்ணில் 1952 மனங்களில் 2006

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும், தமிழ் இளைஞர் பேரவை, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் ஒன்றரை தசாப்தங்களுக்கு மேல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) அங்கத்துவம் வகித்தவருமான தோழர் புஸ்பராஜா 10.03.2006 அன்று பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 54 வயதில் காலமானார். அவர் 1980 களின் முற்பகுதியில் புலம் பெயர்ந்து பிரான்சுக்கு சென்றிருந்தார்.

1970களின் முற்பகுதி, நடுப்பகுதிகளில் இலங்கை அரசின் சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். சித்திரவதைகளை அனுபவித்தவர். பழைய தமிழ் அரசியல் தலைமைகளினதும் புதிய இளம் தலைமுறையினரதும் உருவாக்கத்தின் மாற்றக் காலகட்டத்தின் பிரதிநிதி தோழர் புஸ்பராஜா என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற அவரது நூல் இன்றைய தலைமுறையினர் பலர் அறியாத தகவல்களை கொண்டிருந்தது.

அவர் இலக்கிய சந்திப்பு, அரசியல், கவிதை, பெண்ணுரிமை என பன்முக ஈடுபாட்டைக் கொண்டிருந்தார்.

சிவகுமாரன், சத்தியசீலன், பொன் முத்துகுமாரசாமி, தோழர். க. பத்மநாபா, தோழர்.அ.வரதராஜப்பெருமாள் ஆகியோருடன் இணைந்து தொழிற்பட்டவர்.

தமிழ் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் வரலாற்றில் தோழர் புஸ்பராஜாவின் பங்கு முக்கியமானது.

அன்னாரின் குடும்பத்தினருக்கும், நண்பர்கள், தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அவருக்கு எமது அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.

**ஈ.பி.ஆர்.எல்.எவ்-பத்மநாபா**

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 12.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.